சுரமுக பதிரத்னம் சூக்ஷ்மபோதைக ரத்னம்
பரம சுகதரத்னம் பார்வதீ சூனு ரத்னம்
சரவணபவ ரத்னம் சத்ரு ஸம்ஹார ரத்னம்
ஸ்மர ஹரசுத ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த ரத்னம் ||

* சரணாகதி எவ்வளவுக் கெவ்வளவு வலுக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு ஆண்டவன் அனுக்கிரகமும் வலுக்கின்றது.
* பரிசுத்தமடைந்த இதயத்தையே ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்போதுதான் அவன் அருள் கிட்டும்.
* ஆண்டவனுக்கும் அவனது நாமத்திற்கும் வித்தியாசம் இல்லை. எனவே எமது மேலான கடமை இறைவன் புகழ் பாடுவதும், அதில் அடைக்கலம் புகுவதுமேயாகும்.
* ஆண்டவனருள் பெற கல்வித்திறமை முக்கியமல்ல. விசுவாசமும், மனத்தூய்மையும் பக்தியுமே வேண்டும்.

❋ ❋ ❋

## காமக் குரோதாதிகள்

ஆண்டவனருள் கிடைக்காது எம்மை மயக்குவன காம, குரோத, லோப, மோஹ, மத, மாத்சர்யம் என்னும் ஷட் வர்க்கங்களாகும். இவற்றுள், காமமென்பது தனம், தானியம், மண், பொன், பெண் ஆகியவற்றில் அதிக ஆசையை வைத்தல். குரோதமென்பது ஒருவனுக்கு கெடுதி விளைவிக்கும் வண்ணம் முயற்சி எடுத்தல். லோபமென்பது தனது பூமி, பொருள் இவற்றிலிருந்து சிறிதேனும் ஒருவருக்கும் (ஞானிகளுக்குங் கூட) கொடுக்கக்கூடாது என எண்ணுதல். மோஹமென்பது மனைவி, மக்கள்மீது அதிக ஆசையை வைத்து, தனது பொருள் போதாதென்று மீண்டும் மீண்டும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்னும் ஆசை மயக்கம் கொள்ளுதல். மதமென்பது பொருள் அதிகரிப்பதனுல் மற்றையோர்களை மதிக்காமல் பேசும் அகங்காரம் உண்டாதல். மாத்சர்யம் என்பது மற்றையோரது ஆடம்பரம், சுகவாழ்க்கையைக் கண்டு சகிக்காமல் மனத்தில் பொறாமை கொள்ளுதல்.

இக்குணங்களை நீக்குவதனுல் மனிதன் வாழ்வில் சுகபோகங்களைப் பெற்று இறையருளைப் பெறலாம். இதையே லலிதா சகஸ்ர நாமத்தில் ''காமக்குரோதாதி ஷட் வர்க்க நாசநாயை நம'' என அம்பாளை பாராயணம் செய்கின்றோம்.

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ரக்தாக்ஷி ௵ வைகாசி ௴
( 14 - 5 - 84 )

| மலர் 7 | இதழ் 2 |
|---|---|

## உள்ளே......................

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி? ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | வைகாசி மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | வைகாசி மாத வானியற்காட்சி ... | 7 |
| 6 | அபரக் கிரியைகள் ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 9 |
| 8 | அதிஷ்ட எண் ஞானம் ... | 17 |
| 9 | செவ்வாய் தோஷம் ... | 19 |
| 10 | ஆய்வு மன்றம் ... | 21 |
| 11 | அன்னையைக் கண்டேன் ... | 22 |
| 12 | தினப்பொருத்தம் எப்படி? ... | 24 |
| 13 | சோதிடம் கற்போம் ... | 26 |
| 14 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 28 |

# நாள் எப்படி?

வை 1 திங் (14-5-84) சதுர்த்தசி பகல் 12-17 வரை, சுவாதி-அமிர்தம் பி.ப.3-35 வரை. பூரணை விரதம்-புத்தவிசாகம் முக்கிய கருமங்களை பகல் 12-17க்கும் பி.ப 3-35க்கும் இடையில் செய்க. ராகு 7-23—8-53

வை 2 செவ் (15-5-84) பூரணை பகல் 9-59 வரை விசாகம் - மரணம் பி. ப, 2-09 வரை, சுபகருமங்களுக்கு நன்றல்ல ராகு 2-53 — 4-23

வை 3 புத (16-5-84) பிரதமை காலை 8-08வரை, அனுஷம் பகல் 1-10 வரை, அமிர்தசித்தம். எல்லாச் சுபகருமங்களும் செய்யலாம். ராகு 11-53 — 1-23

வை 4 வியா (17-5-84) துவிதியை காலை 6-50 வ. கேட்டை-மரணம் ப. 12-45 வ. அவசிய கருமங்களை 12-45ன் மேல் செய்க. ராகு 1-23 — 2-53

வை 5 வெள் (18-5-84) திரிதியை காலை 6-11 வ. மூலம்-அமிர்தம் பகல் 12-58 வரை, முக்கிய கருமங்களை காலை 6-11 க்குள் செய்க. ராகு 10-23 — 11-53

வை 6 சனி (19-5-84) சதுர்த்தி காலை 6-12 வரை, பூராடம் பகல் 1-53 வரை, சித்தம். சுபகருமங்களை பகல் 1-53க்கு மேல் செய்க. ராகு 8-53 — 10-23

வை 7 ஞா (20-5-84) பஞ்சமி காலை 6-56 வரை, உத்தராடம் பி.ப. 3-28 வரை, அமிர்தம். சுபகருமங்களுக்கு நன்று. ராகு 4-22 — 5-52

வை 8 திங் (21-5-84) ஷஷ்டி காலை 8-18 வரை, திருவோணம் மாலை 5-33 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-22—8-52

வை 9 செவ் (22-5-84) ஸப்தமி - மரணம் பகல் 10-10 வரை, அவிட்டம்-சித்தம் இரவு 8-15 வ. சுபகருமங்களை விலக்குக. ராகு 2-52 — 4-22

வை 10 புத (23-5-84) அஷ்டமி பகல் 12-24 வரை சதயம் இரவு 11-08 வரை, சித்தாமிர்தம். அஷ்டமி-நவமி யாகையால் சுபகருமங்களை விலக்குக. ராகு 11-52 — 1-22

வை 11 வியா (24-5-84) நவமி பி, ப, 2-46 வரை, பூரட்டாதி பி.இ. 2-03 வரை, சித்தம். பி. இ. 2-03 வரை சுப கருமங்களை விலக்க வேண்டும். ராகு 1-22 — 2-52

வை 12 வெ (25-5-84) தசமி மாலை 5-04 வரை, உத்தரட்டாதி பி. இ, 4-49 வரை, சித்தம். எல்லாக் கருமங்களும் செய்யலாம். ராகு 10-22 — 11-52

வை 13 சனி (26-5-84) ஏகாதசி இரவு 7-04 வரை, ரேவதி-மரணம் முழுவதும். ஸர்வ ஏகாதசி விரதம் சுப கருமங்களை விலக்குக. ராகு 8-52—10-22

வை 14 ஞா (27-5-84) துவாதசி இரவு 8-42 வரை, ரேவதி-அமிர்தம் காலை 7-16 வரை, நற்கருமங்களை காலை 7-16க்குள் செய்க. ராகு 4-22 — 5-52

வை 15 திங் (28-5-84) திரயோதசி இரவு 9-47 வ. அசுவினி பகல் 9-15 வரை, சித்தம். பிரதோஷம் அக்கினிநாள் முடிவு, அவசிய கருமங்களை பகல் 9-15க்குள் செய்க. ராகு 7-22—8-52

வை 16 செவ் (29-5-84) சதுர்த்தசி இரவு 10-19வ, பரணி பகல் 10-43 வரை, சித்தம், கார்த்திகை விரதம், சுபகருமங்களை விலக்குக. ராகு 2-52 — 4-22

வை 17 புத (30-5-84) அமாவாசை இரவு 10-18வ. கார்த்திகை பகல் 11-38 வரை, அமிர்தசித்தம், அமாவாசை விரதம். இரவு 10-18 வரை சுப கருமங்களை நீக்குக. ராகு 11-52—1-22

வை 18 வியா (31-5-84) பிரதமை இரவு 9-46 வ. ரோகிணி பகல் 12-02 வரை, மரணம், சுபகருமங்களை விலக்குக. ராகு 1-22 — 2-52

வை 19 வெள் (1-6-84) துவிதியை இரவு 8-57 வ. மிருகசீரிடம் பகல் 11-56 வரை, சித்தம் பகல் 10-22 வ. எல்லா சுபகருமங்களும் செய்ய நன்று. ராகு 10-22 — 11-52

வை 20 சனி (2-6-84) திரிதியை - மரணம் இரவு 7-24 வரை. திருவாதிரை - சித்தம் பகல் 11-26வ. சுபகருமங்களை விலக்குக. ராகு 8-52 — 10-22.

வை 21 ஞா (3-6-84) சதுரத்தி மாலை 5-42 வரை, புனர்பூசம் பகல் 10-36 வரை, சித்தம், சதுர்த்தி விரதம் மாலை 5-42 இன் மேல் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 4-22 — 5-52

வை 22 திங் (4-6-84) பஞ்சமி பி. ப. 3-45 வரை, பூசம் பகல் 9-29 வரை, சித்தம், ஷஷ்டிவிரதம் சுபகருமங்களை பகல் 9-27 க்குள் செய்க. ராகு 7-22 — 8-52

வை 23 செ (5-6-84) ஷஷ்டி பகல் 1-37 வரை, ஆயிலியம் காலை 8-11 வரை, சித்தம், சுப கருமங்களை விலக்குக். ராகு 2-52 — 4-22.

வை 24 புத (6-6-84) ஸப்தமி பகல் 11-22 வரை, மகம் காலை 6-44 வரை அதன்மேல் பூரம் பி.இ. 5-13 வரை, சித்தாமிர்தம். காலை 6-44க்குள் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 11-52 — 1-22.

வை 25 வியா 7-6-84 அஷ்டமி பகல் 9-03 வரை உத்தரம் - மரணம் பி. இ. 3-41 வரை. சுப கருமங்களை விலக்குக. ராகு 1-22 — 2-52.

வை 26 வெ (8-6-84) நவமி காலை 6-44 வரை, அதன்மேல் தசமி பி. இ. 4-28 வரை, அத்தம் - அமிர்தம் பி. இ. 2-12 வரை, காலை 6-44க்கு மேல் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-22—11-52.

வெ 27 சனி (9-6-84) ஏகாதசி பி. இ. 2-19 வ. சித்திரை – மரணம் இரவு 12-50 வரை, ஸ்மார்த்த ஏகாதசிவிரதம். சுபகருமங்களுக்கேற்ற தினமன்று. ராகு 8-52 — 10-22

வை 28 ஞா (10-6 84) துவாதசி இரவு 12-20 வ. சுவாதி - சித்தம் இரவு 11-37 வரை, வைஷ்ணவ ஏகாதசி விரதம் பொதுவாக எல்லாக் கருமங்களும் செய்யலாம். ராகு 4-23 — 5-53.

வை 29 திங் (11-6-84) இரவு 10-37 வரை விசாகம் - மரணம் இரவு 10-40வரை, வைகாசி விசாகம், பிரதோஷ விரதம் சுபகருமங்களை விலக்குக. ராகு 7-23 — 8-53.

வை 30 செவ் (12-6-84) சதுர்த்தசி இரவு 9-13 வ அனுஷம்-சித்தம் இரவு 10-02 வரை, சுபகருமங்களை விலக்குக. ராகு 2-53 — 4-23

வை 31 புத (13-6-84) பூரணை இரவு 8-12 வரை, கேட்டை–சித்தம் இரவு 9-48 வரை, பூரணை விரதம். சுபகருமங்களுக்கு நன்றல்ல. ராகு 11-53 — 1-23

## விசாகத் திருநாள்

வைகாசி மாதத்தில் கூடும் விசாக நட்சத்திரத்திர தினம் பூரணையுடன் சேர்வதால் மிகவும் சிறப்பாக அமைவதுண்டு. எனினும் இம்மாதத்தில் வரும் விசாகம் மாதத்திற்கோர் பெருமையைக் கொடுக்கின்றது.

சூரபத்மன் முதலான அசுரர்களின் துன்பங்களினின்றும் தேவர்களைக் காப்பதற்காக இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. அவை வாயு, அக்கினி தேவர்களினால் சரவணப் பொய்கை எனுந் தடாகத்தில் கொண்டு விடப்பட்டன. அவ்வாறு விடப்பட்ட ஆறு பொறிகளும் ஆறு முகங்களுடைய அழகிய குழந்தையாகத் தோன்றின. இவ்வாறு கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஒரு திருமுருகன் ஆங்கு உலகமுய்ய இவ் வைகாசி விசாகத் தினத்திலே உதித்தனன். இதையொட்டியே வைகாசி விசாகத் தினத்தில் ஆலயங்களில் ஆறுமுகப் பெருமான் தேரில் காட்சி கொடுப்பதாக மகோற்சவங்கள் நடைபெறுகின்றன

ஐம்பூதங்களும் உயிருமாகிய ஆறினையும் திருமுகங்களாக உருவகித்துக் கூறி எங்கும் நிறைந்த இறைவனின் அருட்தன்மையை உலகத்தோர்க்கு எஞ்ஞான்றும் நினைவுறுத்துவதற்காகவே இறைவனை ஆறுமுகப் பெருமான், சண்முகக் கடவுள் என்றழைக்கின்றனர் போலும்.

மேலும் இத்தினத்தில் வைஷ்ணவ சமயத்தில் நம்மாழ்வார் அவதாரமும், அகிம்சாமூர்த்தியான புத்தர் அவதாரமும், மோக்ஷமடைந்ததும் இத்தினத்திலேயாகும்.

## பன்னிரு லக்ன பழமொழிகள்

மேஷம்: தகரொடு எதிரிடேல் (தகர் - ஆடு)
இடபம்: எருதொடு தோரேல்.
மிதுனம்: தண்டு கொண்டில் புகேல். (தண்டு-வீணை)
கடகம்: நண்டானுக்கு இடங் கொடேல்.
சிங்கம்: சிங்கத்தாரோடு செருக்கேறேல்.
கன்னி: கன்னி மகளைக் கைப்பிடி.
துலாம்: துலாத்தோன் எவ்விடத்தும் தோலான்.
விருச்சிகம்: தேளானை பேணிக்கொள்.
தனுசு: வில்லானைச் சொல்லால் வ[illegible].
மகரம்: மகரத்தாரோடு வழக்கேறேல்.
கும்பம்: கும்பத்தான் முன்னின்று வெல்லான்.
மீனம்: மீனத்தானை விடேல்! விடேல்!!

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


ரக்தாக்ஷி ஸ்ரீ வைகாசி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (14-5-84 முதல் 13-6-84 வரை)

| இங் | தமி | வாரம் | இடபம் | | மிதுன | கடகம் | சிங்கம் | கன்னி | துலாம் | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே | வைகா | | ம.மி. முதல் | ம.மி. வரை (காலை) | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை) (பி.இ) |
| 14 | 1 | திங் | 5 54 | 7 56 | 10 08 | 12 15 | 2 16 | 4 15 | 6 19 | 8 29 | 10 37 | 12 33 | 2 18 | 4 00 | 5 50 |
| 15 | 2 | செவ் | 5 51 | 7 53 | 10 05 | 12 12 | 2 13 | 4 12 | 6 16 | 8 26 | 10 34 | 12 30 | 2 15 | 3 57 | 5 47 |
| 16 | 3 | புதன் | 5 48 | 7 49 | 10 01 | 12 08 | 2 09 | 4 08 | 6 12 | 8 22 | 10 30 | 12 26 | 2 11 | 3 53 | 5 43 |
| 17 | 4 | வியா | 5 44 | 7 45 | 9 57 | 12 04 | 2 05 | 4 04 | 6 08 | 8 18 | 10 26 | 12 22 | 2 07 | 3 49 | 5 39 |
| 18 | 5 | வெள் | 5 40 | 7 41 | 9 53 | 12 00 | 2 01 | 4 00 | 6 04 | 8 14 | 10 22 | 12 18 | 2 03 | 3 45 | 5 35 |
| 19 | 6 | சனி | 5 36 | 7 37 | 9 49 | 11 56 | 1 57 | 3 56 | 6 00 | 8 10 | 10 18 | 12 14 | 1 59 | 3 41 | 5 31 |
| 20 | 7 | ஞாயி | 5 32 | 7 33 | 9 45 | 11 52 | 1 53 | 3 52 | 5 56 | 8 06 | 10 14 | 12 10 | 1 55 | 3 37 | 5 27 |
| 21 | 8 | திங் | 5 28 | 7 29 | 9 41 | 11 48 | 1 40 | 3 48 | 5 52 | 8 02 | 10 10 | 12 06 | 1 51 | 3 33 | 5 23 |
| 22 | 9 | செவ் | 5 24 | 7 25 | 9 37 | 11 44 | 1 45 | 3 44 | 5 48 | 7 58 | 10 06 | 12 02 | 1 47 | 3 29 | 5 19 |
| 23 | 10 | புதன் | 5 20 | 7 21 | 9 33 | 11 40 | 1 41 | 3 40 | 5 44 | 7 54 | 10 02 | 11 58 | 1 43 | 3 25 | 5 15 |
| 24 | 11 | வியா | 5 16 | 7 17 | 9 29 | 11 36 | 1 37 | 3 36 | 5 40 | 7 58 | 9 58 | 11 54 | 1 39 | 3 21 | 5 11 |
| 25 | 12 | வெள் | 5 12 | 7 13 | 9 25 | 11 32 | 1 33 | 3 32 | 5 36 | 7 46 | 9 54 | 11 50 | 1 35 | 3 17 | 5 07 |
| 26 | 13 | சனி | 5 08 | 7 09 | 9 21 | 11 28 | 1 29 | 3 28 | 5 32 | 7 42 | 9 50 | 11 46 | 1 31 | 3 13 | 5 03 |
| 27 | 14 | ஞாயி | 5 04 | 7 05 | 9 17 | 11 24 | 1 25 | 3 24 | 5 28 | 7 38 | 9 46 | 11 42 | 1 27 | 3 09 | 4 59 |
| 28 | 15 | திங் | 5 00 | 7 01 | 9 13 | 11 20 | 1 20 | 3 20 | 5 24 | 7 34 | 9 42 | 11 38 | 1 23 | 3 05 | 4 55 |
| 29 | 16 | செவ் | 4 56 | 7 57 | 9 09 | 11 16 | 1 16 | 3 16 | 5 20 | 7 30 | 9 38 | 11 34 | 1 19 | 3 01 | 4 51 |
| 30 | 17 | புத | 4 52 | 6 53 | 9 05 | 11 12 | 1 12 | 3 12 | 5 16 | 7 26 | 9 34 | 11 30 | 1 15 | 2 57 | 4 47 |
| 31 | 18 | வியா | 4 48 | 6 49 | 9 01 | 11 08 | 1 09 | 3 08 | 5 12 | 7 22 | 9 30 | 11 26 | 1 11 | 2 53 | 4 43 |
| ஜூன் 1 | 19 | வெள் | 4 44 | 6 45 | 8 57 | 11 04 | 1 05 | 3 04 | 5 08 | 7 18 | 9 26 | 11 22 | 1 07 | 2 49 | 4 39 |
| 2 | 20 | சனி | 4 40 | 6 41 | 8 53 | 11 01 | 1 01 | 3 00 | 5 04 | 7 14 | 9 22 | 11 18 | 1 03 | 2 45 | 4 35 |
| 3 | 21 | ஞாயி | 4 36 | 6 37 | 8 49 | 10 56 | 12 57 | 2 56 | 5 00 | 7 10 | 9 18 | 11 14 | 12 59 | 2 41 | 4 31 |
| 4 | 22 | திங் | 4 32 | 6 33 | 8 45 | 10 52 | 12 53 | 2 52 | 4 56 | 7 06 | 9 14 | 11 10 | 12 55 | 2 37 | 4 27 |
| 5 | 23 | செவ் | 4 28 | 6 29 | 8 41 | 10 48 | 12 49 | 2 48 | 4 52 | 7 02 | 9 10 | 11 06 | 12 51 | 2 33 | 4 23 |
| 6 | 24 | புதன் | 4 24 | 6 25 | 8 37 | 10 44 | 12 45 | 2 44 | 4 48 | 6 58 | 9 06 | 11 02 | 12 47 | 2 29 | 4 19 |
| 7 | 25 | வியா | 4 20 | 6 21 | 8 33 | 10 40 | 12 41 | 2 40 | 4 44 | 6 54 | 9 02 | 10 58 | 12 43 | 2 24 | 4 15 |
| 8 | 26 | வெள் | 4 16 | 6 17 | 8 29 | 10 36 | 12 37 | 2 36 | 4 40 | 6 50 | 8 58 | 10 54 | 12 39 | 2 21 | 4 11 |
| 9 | 27 | சனி | 4 12 | 6 13 | 8 25 | 10 32 | 12 33 | 2 32 | 4 36 | 6 46 | 8 54 | 10 50 | 12 35 | 2 17 | 4 07 |
| 10 | 28 | ஞாயி | 4 8 | 6 09 | 8 21 | 10 28 | 12 29 | 2 28 | 4 32 | 6 42 | 8 50 | 10 46 | 12 31 | 2 13 | 4 03 |
| 11 | 29 | திங் | 4 4 | 6 05 | 8 17 | 10 24 | 12 25 | 2 24 | 4 28 | 6 38 | 8 46 | 10 42 | 12 27 | 2 09 | 3 59 |
| 12 | 30 | செவ் | 4 00 | 6 01 | 8 13 | 10 20 | 12 21 | 2 20 | 4 24 | 6 34 | 8 42 | 10 38 | 12 23 | 2 05 | 3 55 |
| 13 | 31 | புதன் | 3 56 | 5 57 | 8 9 | **10 16** | 12 17 | 2 16 | 4 20 | 6 30 | 8 38 | 10 34 | 12 19 | 2 01 | 3 51 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: வைகாசி 31உ (13-6-84) பகல் 10-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-09—10-16) கடகலக்னம்

# வைகாசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

8உ (21-5-84) பகல் 3-49 க்கு இட-சுக்

21 உ (3-6-84) பி. இ. 5-00 க்கு இட-புத

30உ புதன் அஸ்தமனம்

குஜன், குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன் மாதம் முழுவதும் வக்கிரத்திலேயே சஞ்சரிக்கின்றனர்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வை | 2உ | (15-5-84) | காலை | 8-28 | முதல் | விருச்சிகம் |
| | 4உ | (17-5-84) | பகல் | 12-45 | ,, | தனுசு |
| | 6உ | (19-5-84) | இரவு | 8-13 | ,, | மகரம் |
| | 9உ | (22-5-84) | காலை | 6-54 | ,, | கும்பம் |
| | 11உ | (24-5-84) | இரவு | 7-19 | ,, | மீனம் |
| | 14உ | (27-5-84) | காலை | 7-16 | ,, | மேடம் |
| | 16உ | (29-5-84) | மாலை | 4-59 | ,, | இடபம் |
| | 18உ | (31-5-84) | பி.இ. | 12-02 | ,, | மிதுனம் |
| | 20உ | (2-6-84) | ,, | 4-50 | ,, | கடகம் |
| | 23உ | (5-6-84) | காலை | 8-11 | ,, | சிங்கம் |
| | 25உ | (7-6-84) | ,, | 10-50 | ,, | கன்னி |
| | 27உ | (9-6-84) | பகல் | 1-29 | ,, | துலாம் |
| | 29உ | (11-6-84) | மாலை | 4-52 | ,, | விருச்சிகம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி வைகாசி மீ 31உ பகல் 10-00 மணிக்கு கடக லக்னம் என அறிந்து கொண்ட பின் கடகம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் தேசிய பொருளாதாரம் மந்த நிலையாகவே இருக்கும். நிம்மதியின்மையும், கலவரங்களும் இடையிடையே இருந்துகொண்டே இருக்கும். பலவகையான பாதிப்புகளும் உண்டு; விவசாயப் பகுதி முன்னேற்றம் காணும். விலைவாசிகள் குறைய இடமில்லை; தொற்று நோய்களும் பரவும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (வைகாசி மாதம் 1-ந்தேதி முதல் 31-ந்தேதி வரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53<br>6...53 | 6...53<br>7...53 | 7...53<br>8...53 | 8...53<br>9...53 | 9...53<br>10...53 | 10...53<br>11...53 | 11...53<br>12...53 | 12...53<br>1...53 | 1...53<br>2...53 | 2...53<br>3...53 | 3.. 53<br>4...53 | 4.. 53<br>5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# வைகாசி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

**14-5-84 — 13-6.84**

சூரியன்: 14-5-84 பகல் மணி 11-44-ல் இடபராசிப் பிரவேசம்
14-5-84 உதயம் காலை 5–53
அஸ்தமனம் மாலை 6-19
13-6-84 உதயம் காலை 5-53
அஸ்தமனம் மாலை 6–26

சந்திரன்: 15-5-84 பூரணை பகல் மணி 9-59
23-5-84 அபர அஷ்டமி பகல் மணி 12-24
30-5-84 அமாவாசை இரவு மணி 10-18
1-6-84 சந்திரதரிசனம்
7-6-84 பூர்வ அஷ்டமி பகல் மணி 9-03
13-6-84 பூரணை இரவு மணி 8-12

புதன்: மாத ஆரம்பத்தில் சூரியோதயம் முன் கீழ்வானத்தில் 24 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 19-5-84-ல் கூடிய தூரமாகிய 26 பாகை உயரத்தில் காணப்படும். பின் அதன் உயரம் படிப்படியே குறைந்து 12-6-84-ல் சூரிய சாமீபத்தால் கிழக்கில் அஸ்தமனமடையும். 3-6-84-ல் இடபராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: 17-5-84ல் கிழக்கில் அஸ்தமனமடையும் இக்கிரகம் அதன்பின் தோற்றுது. 21-5-84-ல் இடபராசியிற் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரியன் அஸ்தமனமாகும்போது கிழக்கு வானத்தில் உதயமாகும் இக்கிரகம் நாளடைவில் உயர்ந்து உயர்ந்து காணப்படும். மாதமுடிவில் கிழக்கு வானில் 38 பாகை உயரத்தில் காணப்படும். இம்மாசம் முழுவதும் வக்கிரகதியில் துலாராசியிற் சஞ்சரிக்கின்றது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரியோதயம் முன் மேற்குவானில் 50 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 28 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாசம் முழுவதும் வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் 11-6-84-ல் தனுராசியில் பூராடம் 1-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி: இம்மாசம் முழுவதும் வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின்பின் கீழ்வானத்தில் 10பாகை உயரத்தில் காணப்படும். மாதமுடிவில் 42 பாகை உயரத்தில் காணப்படும். இம்மாசம் முழுவதும் துலாராசியில் சுவாதி 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

இந்திரன் (Uranus): வக்கிரகதியில் விருச்சிக ராசியில் கேட்டை 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune): வக்கிரகதியில் 11-6-84ல் தனுராசியில் மூலம் 2ம்பாதத்திற் பிரவேசிக்கிறது.

குபேரன் (Pluto): வக்கிரகதியில் துலா ராசியில் சித்திரை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

**சமாகமாதிகள்:**

14-5-84 பிற்பகலில் சந்திரனால் சனி கிரகணமடையும். மத்திய தென்பசிபிக் தென்னமெரிக்கப் பிரதேசங்களில் தெரியும். சூரியாஸ்தமனத்தின்பின் நாம்பார்க்கும்போது சனிக்குக் கிழக்கில் சந்திரன் 2½ பாகை தூரத்தில் காணப்படும்.

14-5-84 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 2 பாகை.

18-5-84 இரவு 10 மணியளவில் சந்திரனுக்கு வடக்கு வியாழன் 3 பாகை.

19-5-84-ல் செவ்வாய் பூமிக்குச் சமீபமான நிலையில் கூடிய பிரபையுடன் காணப்படும்.

28-5-84 நள்ளிரவு அளவில் புதன் சந்திரனால் கிரகணமடையும். வடபசிபிக், கனடா, அலஸ்கா ஆகிய இடங்களில் தெரியும்; உதயம்முன் நாம் பார்க்கும்போது சந்திரனுக்குமேல் 3 பாகையில் புதன் காணப்படும்.

30-5-84 கங்கண சூரிய கிரகணம். எமக்குத் தெரியாது. வட அமெரிக்கா, கிறீன் லாந்து, மேற்கு ஐரோப்பா ஆகிய இடங்களில் தெரியும்.

10-6-84 மாலை 6 மணியளவில் சந்திரனால் சனி மறைக்கப்படும்.

இரவு 7½ மணியளவில் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 4 பாகை. இடைநேரத்தில் சனி, சந்திரன், செவ்வாய் ஆகிய மூன்றும் முக்கோணமாய் கீழ்வானத்திற் காண்பது அழகான காட்சியாகும்.

# அபரக் கிரியைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இறந்த உடலை நீராட்டி தர்ப்பையில் வைத்த பின்னர் சிவாசாரியார் பஞ்ச சுத்திகளை யும், சகளீ கரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனை யும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவர். கும்பத்திலிருந்த சிவனை உடலின்மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வர். இருதயத்தில் ஆசன பூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரம மந்திரங் களைப் பதித்து, அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசாரி யர் இறந்தவரின் நித்திய அனுஷ்டானக் குற்றங் களைத் தீர்க்க ஆகுதி செய்து அவ்வுடலுக்குந் தனக்கும் நாசிசந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆத்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டு வந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதி யுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

சுடலை சேர்தல்: உடலை பாடையில் வைத்துச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்ட திக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசார முள்ள ஒருவரே இதனைச் செய்யத் தக்கவராவர்.) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல் லப்படும். சுடலையில் நான்குமுள நீளம், இரண்டு முள அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத் தானம் என்றுபெயர்பெறும். இச்சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன்மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

தீயிடல்: கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்பநீரை உடலுக்குத் தெளித்துக் குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளிவைத்தவர் பின் நீர்க் கரையில் நீராடி வீடு செல்வர். தீ இடும் பொழுது ''அக்கினி தேவனே, பரிசுத்தமாயிருக் கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரண குதியை ஏற்றுக்கொள்ளும்'' என நினைந்து கொண்டே தீ இடவேண்டும்.


அத்திசஞ்சயனம்: அத்திசஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்த எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்த லாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல். இஃது கால் தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலு டன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட் டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடை யும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

பாத்திரத்தில் சேர்க்கப்பட்ட அத்தியை உடனேயே புண்ணிய தீர்த்தத்தில் இடுதல் வேண் டும். (அதனை வீட்டில் கொண்டுவந்து வைத்து அந்தியேட்டியின் போது கொண்டுசென்று புண் ணிய தீர்த்தத்தில் கரைக்கிறார்கள். ஆனால் இக் கருமத்தை உடன் செய்வதே சிறந்தது.)

நக்னதானம்: இது தகனக் கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியா ருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமா கக் கொடுத்தல்.

அந்தியேட்டி: இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப்பொருள்படும். அந் திய - கடைசிநாள். இட்டி - யாகம். இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுஷ்டானத்திலுள்ள குற் றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

பாஷாண பூசை: ஒரு கல்லை வைத்து, இறந்த வரின் ஆத்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப்பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதா கின்றது. பூஜையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்றம் நீக்கமும் உண்டாகும். (தொடரும்)




**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**14-5-84 முதல் 13-6-84 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை I-ம் கால்

இவ்விராசியினர்க்குச் சூரியன் தாம்ரமூர்த்தியாக 2-ல் வலம் வருவதால் இம்மாதம் நற்பலன்கள் எதுவும் சொல்வதற்கில்லை. சனி செவ்வாய் 7-ம் வீட்டில் எடுத்த காரியங்களில் தடைதாமதங்களைக் கொடுத்த வண்ணமிருக்கும். அட்டமத்தில் யுரேனஸ் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியைத் தரும். ஆரோக்கியச் செலவுகள் அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவால் மனவேதனை உருவாகும். ஜன்மராசிப் புதன் புத்தி சாதுர்யத்துடன் கருமமாற்ற உதவி நிலைமையைச் சமாளிக்க வைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் மூர்த்திபலமில்லாத சூரியனும் கேதுவும் இருப்பதால் பணக்கஷ்டம் அதிகரிப்பதோடு மனைவி மக்களின் தொல்லைகளும் கூடும். களத்திரசுகம் புத்திரசுகங்களை எதிர்பார்க்க முடியாது.

வியாபாரிகட்கு ஜன்மராசிப் புதன் வியாபார தந்திரங்களுக்கு உதவியாகவிருப்பினும், லாபங்களை எதிர்பார்க்கவியலாது. முதலீடுகள் செய்ய போதிய வசதியிராது. அழகுசாதனப்பொருள் வியாபாரம் சுமாராக நடக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்திபலமில்லாமையால் அரசியல் தொல்லைகள் அதிகரிக்கும். மாற்றங்கள் விருப்பத்திற்கேற்றவாறு அமையாது. சக உத்தியோகத்தருடன் பிரச்சனைகள் தோன்றும்.

விவசாயிகட்கு 7-ல் சனி இருப்பதால் பயிர்ச் செய்கையில் பல நஷ்டங்களை அனுபவிக்க நேரும். அரச மானிய உதவிகள் தடைப்படும். எடுத்த முயற்சியைக் கைவிடாது தொடர்ந்தால் ஈற்றில் நற்பலனுண்டு.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தி குன்றுவதுடன் புதுத்தொழில் தேடுவதற்கும் காலம்

சாதகமாயில்லை. பழைய ஒப்பந்தங்கள் இழுபறி நிலையிலிருக்கும்.

மாணவர்கட்கு புதன் ஜன்ம ராசியில் திக்பலம் பெறினும் கல்வியில் முன்னேற்றமில்லை. பரீட்சைகளில் சித்தி கிடைப்பது கடினம். கலைத் துறை விளையாட்டுத் துறைகளில் ஈடுபடுவதற்கும் காலம் சாதகமாயில்லை.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் தொடர்ந்தும் தடைகள் ஏற்பட்டவண்ணமிருக்கும். குடும்பஸ்தர்கட்கு கணவனின் ஒத்துழைப்பு இல்லை. தொழில் பார்ப்போர்க்கு வேலைஸ்தலத்தில் சிக்கல்கள் தோன்றும்.

அதிஷ்ட நாட்கள்: மே 22, 23, 24 மு. ப, யூன் 7 பி.ப, 8, 9 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: மே 15 பி.ப, 16, 17 மு.ப, 24 பி.ப, 25, 26, யூன் 11 பி.ப, 12, 13.




கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2.

இவர்களுக்குச் சூரியன் சுவர்ணமூர்த்தியாக ஜன்ம ராசியில் பவனி வருவதால் நற்பலன்கள் அதிகரிக்கும். அட்டமத்தில் வியாழன் பலவித அவமானங்களைக் கொடுக்க முனையும். 6-ல் செவ்வாய் சனி சேர்க்கை ஆரோக்கியக் குறைவையும் செலவையும் ஏற்படுத்தும். 7-ல் யுரேனஸ், கேது மாறான பொதுஜன அபிப்பிராயங்களை தோற்றுவிக்கும். இருப்பினும் மூர்த்தி பலம் பெற்ற சூரியனால் இவையெல்லாவற்றிற்கும் மேலான உதவிகள் கிடைக்கப்பெறும். மாத நடுப் பகுதியில் ஏற்படும் சுக்கிர புத மாற்றங்கள் மனவேதனைகளைக் குறைத்து முன்னேற்ற வழியில் இட்டுச் செல்லும்.

குடும்பஸ்தர்கட்கு மாதமுற்பகுதியில் பணக் கஷ்டமும் குடும்ப சச்சரவுகளும் நிறைந்து காணப்படும். புத்திர தொல்லைகள் கஷ்டங்கள் இருக்கும். மாதபிற்பகுதியில் நிலைமை சீரடைய வாய்ப்புகளுண்டு.

வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராக நடக்கும். கொள்ளை லாபமடிப்போர் தண்டனைக்குள்ளாவர். வங்கி உதவிகள் குறைவாயிருப்பினும் மாத பிற்பகுதியில் சமயோசிதமாக முதலீடுகள் செய்து கொள்ளலாம்.

உத்தியோகத்தர்கட்கு மனவேதனைகளை கடும் உழைப்பின் மூலம் மறக்க முயற்சிக்கலாம். மேலதிகாரிகள் வலுக்கட்டாயமாக வேலைப்பழுவை ஏற்றுவார்கள். எனினும் மூர்த்திபலம் பெற்ற சூரியனால் கஷ்டங்கள் அதிகமிராது.

விவசாயிகட்கு கடின உழைப்பால் உடலும் உள்ளமும் சோர்வடையும். உழைப்பிற்கேற்ற பணவருவாய் இராது. அரச உதவிகளுக்கு சிறிது வாய்ப்புகளுண்டு.

தொழிலாளர்கட்கு பலம்பெற்ற சூரியனால் அரச ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புகளுண்டு. உழைப்பால் உடல் தளர்வடையும். இரகசிய எதிரிகளால் ஒப்பந்தங்கள் சீரழியலாம்.

மாணவர்கட்கு மாத முற்பகுதியில் முன்னேற்றமிராது. சட்டக்கல்வி வர்த்தகக்கல்வி பயில்வோர் கவலையடைவர். வெளிநாட்டுக் கல்வி முயற்சியில் சித்தி கிடைப்பதற்கில்லை.

பெண்களுக்கு கல்யாண விவகாரங்கள் கைகூட வழியில்லை. காதல் விடயங்களில் தோல்வியடைவர். குடும்பஸ்தர்க்கு கணவனின் அனுசரணை இருப்பினும் பொருளாதாரக் கஷ்டங்கள் இருக்கவே செய்யும். தொழில் பார்ப்போர் வேலைப்பளு அதிகரிப்பால் நோய்வாய்ப்படுவர்.

அதிஷ்ட நாட்கள்: மே 14, 15 மு. ப, 24 பி. ப, 25, 26, யூன் 9 பி.ப, 10, 11 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: மே 17 பி.ப, 18, 19 மு. ப, 27, 28, 29 மு. ப.




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் ரஜத மூர்த்தியாக 12ல் வலம் வருவதால் நன்மை தீமை கலந்த பலன்கள் காணப்படும். லாபஸ்தான சுக்கிரன், புதன் பணவருவாய் அதிகரிக்க உதவியாக இருக்கும். 6ல் யுரேனஸ், கேது தீராத நோய்களைக் கொடுக்க முயற்சி செய்யும். 5-ல் சனி, செவ்வாய் முதலீடுகளால் பலவிதத்திலும் மன

வேதனைகளைக் கொடுக்கும். 7ல் வியாழன் பொது ஜன விடயங்களில் சாதகமான பலன் செய்யும். சூரியன் மூர்த்தி பலம் பெற்றாலும் 12ல் இருப்பதால் நினைத்த காரிய சித்தியை எதிர்பார்க்க முடியாது.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப வாழ்வில் நிம்மதி இராது. பணப்புழக்கம் படிப்படியாகக் குறையும். 7ல் வியாழன் புத்திர சுகத்திற்கு நன்று. நோய் துன்பங்களால் பலவிதத்திலும் கஷ்ட பலன்களே எஞ்சும்.

வியாபாரிகட்கு வர்த்தக முதலீடுகள் அதிகம் பலனளிக்க இடமில்லை. வங்கி உதவிகளுடன் பணப்புழக்கமிருப்பினும் லாபமடைய வாய்ப்பு இல்லை. கலைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் விற்பனையில் நல்ல இலாபமுண்டு.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 12-ல் இருப்பதால் நற்பலன்களுக்கு இடமில்லை. கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கருமமாற்றினும் நற்பெயர் கிடைப்பதரிது.

விவசாயிகட்கு விவசாய விருத்தி குன்றும். உழைப்பிற்கேற்ற வருவாயிராது. அரச உதவிகள் கிடைப்பதற்கில்லை. காணித் தகராறுகள் இழுபறி நிலையடையும்.

தொழிலாளர்கட்கு கடின உழைப்பால் மனம் வேதனையடையும். ஒப்பந்தங்கள் முடிவடையாது நஷ்டத்தைத் தரலாம். கலை, கலாசாரம் சம்பந்தப்பட்ட தொழில் செய்வோர் நன்மதிப்பும் புகழும் அடைவர்.

மாணவர்கட்கு லாபஸ்தான புதன் பரீட்சையில் சித்தியடைய நல்ல வாய்ப்புகளையளிக்கும். கலைத்துறையில் நற்பெயர் நிலைக்கும். கல்லூரி மாற்றங்கள் செய்வதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. வேலைவாய்ப்பை நாடுவோருக்கு சந்தர்ப்பம் கிடைப்பினும் வெற்றியில்லை.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் ஈடுபட்டோர் களிப்புடன் காலத்தைக் கடத்துவர். எனினும் காதல் கைகூட வழியில்லை. குடும்பஸ்தர் கணவனுடன் மனமகிழ்வைப் பெறுவர். கர்ப்பிணிகள் கர்ப்பக் கோளாறுகளால் வேதனைப்பட நேரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 15 பி.ப, 16, 17 மு.ப, 27, 28, 29 மு.ப, யூன் 11 பி.ப, 12, 13.

துரதிஷ்ட நாட்கள்: மே 19 பி.ப, 20, 21, 29பி.ப, 30, 31.



# கடகம்

**புனர்பூசம் 4-ம் கால் பூசம், ஆயிலியம்**

கடக ராசியினர்க்குச் சூரியன் லோக மூர்த்தியாக லாபஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் கஷ்ட பலன்கள் அதிகரிக்கும். 4-ல் சனி, செவ்வாய் சுற்றாடல் அமைதியின்மையை ஏற்படுத்தும். 5ல் யுரேனஸ், கேது ஆகிய கிரகங்கள் நினைத்த கருமங்கள் நிறைவேற விடாது தடைகளைக் கொடுக்கும். 10ல் வியாழன் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க உதவும். சுக்கிர புத சஞ்சாரங்கள் பண விடயத்திலும் இனத்தவர் விடயத்திலும் சாதகமான பலன் செய்யும். லாபஸ்தானத்தில் சூரியன் இருப்பினும் மூர்த்தி பலமற்றிருப்பதால் அரசியல் தொல்லைகளையும் பிதாவழி கஷ்டங்களையும் தரும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானதிபதி சூரியன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் குடும்ப உறவுகள் சீர்கெடாது. நற்காரிய கொண்டாட்டங்கள் மூலம் இனத்தவர் கரைச்சல்கள் தோன்றலாம். சமூகசேவையில் முன்னணி வகிப்பீர்கள்.

வியாபாரிகட்கு வர்த்தக நடவடிக்கைகள் சீராக இருக்கும். கள்வர் தொல்லை இருக்கும். ஏற்றுமதி சம்பந்தமான கொள்முதல்கள் இலாபத்தைத் தரும். வங்கி கடன்கள் அதிகரித்துத் தொல்லையைத் தரும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பது பல நன்மைகளுக்கு ஏதுவாயினும் மூர்த்தி பலமிழந்திருப்பதால் கஷ்ட பலன்களையே தரும். சூரியன் சனி கெட்ட பார்வையில் அமர்ந்திருப்பதால் அவதானத்துடன் நடந்து கொள்ளவும்.

விவசாயிகட்கு சனி விவசாய விருத்திக்கு உதவும் கிரகமாயினும் 4ல் இருப்பதால் கஷ்டங்களும் பயிரழிவும் ஏற்படலாகும். காலநிலை பயிர்ச்செய்கைக்கு சாதகமாயிராது.

தொழிலாளர்கட்கு புரட்சிகரமான எண்ணங்கள் தலைதூக்கும். எனினும் நடைமுறையில் நன்றாக அமையாது. புதுத்தொழில் தேடி அலைபவர் மேலும் கஷ்டமுறுவர். அரச ஒப்பந்தங்களுக்கு வாய்ப்புகளிருப்பினும் செயல்படுத்த முடியாது.

மாணவர்கட்கு கல்வித் தகைமைகள் பெறக் கடுமையாக முயற்சி செய்தாலும் பரீட்சைகள் சாதகமான முடிவைத் தரா. புலமைப் பரிசில் போன்ற அரச உதவிகள் கிடைப்பதில் மேலும் தடைகள் உருவாகும். பட்டப் படிப்பு, வெளி நாட்டுக் கல்வி கற்போரும் எதிர்பார்த்த பலனை அடைய முடியாது.

பெண்களுக்கு காதல், கல்யாண விவகாரங் கள் கடைசி நேரத்தில் கை நழுவிப் போகும். குடும்பஸ்தர்கட்கு எண்ணம்போல் வாழ்வு அமை யாது. சமூக சேவையிலீடுபடும் பெண்கள் உயர் பதவிகளையடைவர். தொழில் பார்ப்போருக்கு காதல் லீலைகள் அதிகரித்தலால் பின் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்.

அதிஷ்ட நாட்கள்: மே 17 பி.ப, 18, 19 மு.ப, 29 பி.ப, 30, 31,
துரதிஷ்ட நாட்கள்: மே 22, 23, 24 மு. ப, யூன் 1, 2.




மகம், பூரம், உத்தரம் 1 ம் கால்

இவர்களுக்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக சஞ்சரித்தாலும் 1-ல் திக்பலம் பெற்றிருப்பதால் இன்பதுன்பங்கள் கலந்த மாதமாகக் காணப் படும். 3-ல் சனி, செவ்வாய் சகோதர மனவேறு பாடுகளையும் இனசன குழப்பங்களையும் உருவாக் கும். 4-ல் யுரேனஸ், கேது சுற்றுடல் அமைதி யைப் பாதிப்படையச் செய்யும். எண்ணிய கரு மங்கள் எளிதில் நிறைவேற 5-ல் வியாழன் உத வும். 9, 10-ம் இடங்களில் சுக்கிர புத சஞ்சாரங்கள் பிதுர்வழி நன்மைகளையும் வெளிவிவகாரங்களில் மகிழ்வையும் கொடுக்கும். 10-ல் திக்பலம் பெற்ற சூரியன் அரசியல்லாபங்கள் அதிகரிக்கவும், செல் வாக்கு வளரவும் உதவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானுதிபதி புதன் பெலம் பெறுவதால் குடும்பத்தில் ஒற்றுமை நில வும். திரிகோண ராசி வியாழன் புத்திர சுகங் களுக்கும். முன்னேற்றங்களுக்கும் நன்று. நற் காரிய கொண்டாட்டங்களால் குடும்ப அமைதி பாதிப்படையலாம்.

வியாபாரிகட்கு போதிய வங்கி உதவிகளுடன் வியாபாரம் நல்லபடியாக நடந்தாலும் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. அயல் கடைக் காரருடன் பிரச்சினைகள் தோன்றலாம்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகள் அனு சரணை, நன்மாற்றங்கள் போன்ற நற்பலன்கள் கிடைக்காவிடினும் சூரியன் திக்பலம் பெற்றிருப் தால் அதிக கஷ்டங்கள் ஏற்படாது. எண்ணிய கருமங்களை சிறிது காலம் தாழ்த்திச்செய்யவும்.

விவசாயிகட்கு பயிர்ச்செய்கையில் எவ்வித லாபமுமில்லை. அயல் காணித்தகராறுகள் வலுப் பெறும். விவசாய நடவடிக்கைகள் எதுவாயினும் செய்வதற்கு காலம் உகந்ததாகவில்லை.

தொழிலாளர்கட்கு புதுத்தொழில் முயற்சி க்ளுக்கு காலம் நன்றல்ல. அரச ஒப்பந்தங்கள் கிடைக்க சந்தர்ப்பம் ஏற்படினும் இறுதியில் தடைப்படும். முதலாளியின் தயவை நம்பினோர் சிலவேளைகளில் ஏமாற்றப்படவும் கூடும்.

மாணவர்கட்கு வியாழன் 5-ல் புத்திக் கூர் மைக்கும் அறிவுவளர்ச்சிக்கும் நன்றாயினும் கல்வி யில் முன்னேற்றம் குறைவாகவே இருக்கும். கலைத்துறை ஈடுபாடுகள் அதிகரிக்கும். வெளி நாட்டுக் கல்வி கற்போர் முன்னேற்றமடைவர்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் எண் ணங்கள் மெல்ல மெல்ல கைகூடினாலும் விவாக விடயங்களில் வெற்றியடைவது கடினம். குடும் பஸ்தர்கட்கு கணவன் மனைவி உறவு மகிழ்ச்சி யைத்தரும். சுக்கிர புத சஞ்சாரங்களால் நற் காரிய சிந்தனைகள் அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: மே 19 பி.ப, 20,21; யூன் 1,2.
துரதிஷ்ட நாட்கள்: மே 24 பி.ப, 25, 26, யூன் 3, 4, 5 மு. ப




உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னி ராசியைச் சேர்ந்தோர்க்கு சூரியன் இரஜத மூர்த்தியாக 9ல் பவனி வருவதால் நற் பலன்கள் அதிகரிக்கும். சனி, செவ்வாய் 2-ல் வாக்குவாதங்களையும், பண நஷ்டங்களையும் ஏற் படுத்தும். அட்டம ராசி சுக்கிர புத சஞ்சாரங்

கள் சமூக சேவையில் தொடர்புகளை அதிகரிக்கும். 4-ல் வியாழன் சுற்றுடல் அமைதியைப் பேணவும், மன மகிழ்விற்கும் உதவியாக இருக்கும். திரிகோண ராசி சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் பிதுர்வழி நன்மைகள் கிடைக்க, வெளிநாட்டு நன்மைகள் அதிகரிக்க நன்று. 3-ல் யுரேனஸ், கேது ஆகிய கிரகங்களிருப்பதால் அயலில் இன சன கொண்டாட்டங்கள் மிகுதியாக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு சனி தன ஸ்தானத்தில் உச்சமடைவதால் வருமானங்கள் படிப்படியாக அதிகரிக்கும். நற்காரிய கொண்டாட்டங்கள் மன மகிழ்வைத் தரும். புத்திர நன்மைகள் முன்னேற்றங்கள் கிடைக்க காலம் சாதகமாகவுள்ளது.

வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராக இருக்கும். மாத பிற்பகுதி வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு நன்று. வியாபார ஸ்தல சீர்திருத்தங்களுக்கு கிரகநிலை உகந்ததாகவுள்ளது. அழகு சாதனப் பொருள் விற்பனை அதிக லாபம் தரும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்திபலம் அடைவதால் பல நற்பலன்களைப் பெறக்கூடியதாக இருக்கும். அதிகாரிகள் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வர். பழைய பாக்கிகள் வருமதிகளை வசூல் செய்யச் சாதகமான கிரகநிலையுள்ளது.

விவசாயிகட்கு சனி 2-ல் வருமானத்தில் தடங்கல்களை உண்டுபண்ணினும் பின் விளைவுகள் நன்மை தரக்கூடியதாக இருக்கும். தகராறுகள் சாதகமாகத் தீர்வடையும். பண்ணை விவசாயிகள் நல்ல வாய்ப்பைப் பெறுவர்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் சீராக அமையும். தொழிலகத்தில் திருப்தியுடன் வேலை செய்யலாம். அரச தொடர்புகளில் பெயர் துலங்கும். கூட்டுறவில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாகும்.

மாணவர்கட்கு கல்வித் தகைமைகள் பெற நல்ல சந்தர்ப்பம். அரச உதவிகளுடன் கல்வியில் முன்னேற்றமடையலாம். உயர் கல்விக்கு வேண்டிய வசதிகளைப் பெற கிரகநிலை சாதகமாயுள்ளது, 8-ல் சுக்கிரன் மாதமுற்பகுதியில் காதல் விவகாரங்களில் ஈடுபடத் தூண்டும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் பெற்றோரின் அனுமதி கிடைக்கும். விவாக விடயங்களில் சற்று முயற்சி வேண்டும். 4-ல் வியாழனால் நற்காரியங்களில் கலந்து கொள்ள சந்தர்ப்பங்கள் உண்டாகும். முதியோர் உதவிகளும் புத்திமதிகளும் உங்களை வழிநடத்த உதவும்.

| | |
|---|---|
| அதிஷ்ட நாட்கள்: | மே 22, 23, 24 மு. ப. யூன் 3, 4, 5 மு. ப. |
| துரதிஷ்ட நாட்கள்: | மே 27, 28, 29 மு. ப. யூன் 5 பி. ப. 6, 7 மு. ப. |



# துலாம்

**சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3.**

துலா ராசியினர்க்குச் சூரியன் சுவர்ண மூர்த்தியாக பவனி வந்தாலும் அட்டம ராசியில் சஞ்சரிப்பதால் அதிக நன்மைகளை எதிர்பார்ப்பதற்கில்லை. 2-ல் யுரேனஸ், கேது பணவிடயத்தில் ஏற்ற இறக்க நிலையைக் கொடுக்கும். 3-ல் வியாழனால் சகோதர உதவிகள் நிறையவுண்டு. தேகாரோக்கியம் சீராக இருக்கும். 7ம், 8ம் இடங்களில் சுக்கிர புத சஞ்சாரங்கள் வெளியாட்களிடத்தில் செல்வாக்கைக் கொடுத்தாலும் சில கட்டங்களில் அவமரியாதைகளையும் தரலாம். அரச தொல்லைகள் ஏற்படினும் மூர்த்தி பலம் பெற்ற சூரியன் அதனைச் சமாளிக்க உதவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப ஸ்தானத்தில் யுரேனஸ் இருப்பதால் அடிக்கடி பணத்தொல்லைகள் ஏற்படும். எனினும் நிலைமை கட்டுக்கடங்கியே இருக்கும். புத்திர சம்பந்தமான நற்காரியங்கள் கொண்டாட நினைப்போர்க்கு சனி பகவான் தடைகளையுண்டு பண்ணுவார்.

வியாபாரிகட்கு வியாபார நடவடிக்கைகள் இலகுவாக அமைந்தாலும் இலாபமடைய முடியாது. வெளிநாட்டு வர்த்தகத்திலும் சிறப்பில்லை கள்ளமார்க்கட்டில் சிக்கல்கள் தோன்றும்.

உத்தியோகத்தர்கட்கு எடுத்த காரியங்களில் தடங்கல்கள் ஏற்படும். ஜன்மராசிச் சனி கடின உழைப்பைக் கொடுக்கும். அதிகாரிகள் உதவி செய்வதில் தயக்கம் காட்டுவார்கள்.

விவசாயிகட்கு கடின உழைப்பிற்கு நிகரில்லை. அயல் காணிக்காரரின் உதவிகளுண்டு. கையில் கிடைக்கும் பணம் செலவுக்குப் பற்றுக்குறையாயிருக்கும். வழக்கு விவகாரங்களில் காலம் தாழ்த்திச் செயற்படுதல் நன்மை பயக்கும்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் கிடைப்பினும் இலாபம் அதிகரிக்க வழியில்லை. ஜன்மாதிபதி 7ல் கடும் முயற்சியின் மேல் காரிய

சித்திக்கு வழிசெய்வார். சக ஊழியர்களிடையே பேதங்கள் மறையும்.

மாணவர்கட்கு கல்விக்கு கிரகநிலை ஓரளவு துணை புரியும். கலைத்துறை, விளையாட்டுத்துறையில் சக்தியைச் செலவழிப்பதால் பலனெதுவும் கிடைப்பதற்கில்லை. வெளிநாட்டுக் கல்வி விவகாரங்களில் அதிக முன்னேற்றமிராது.

பெண்களுக்கு விவாக விடயங்களில் அதிக முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. காதலர்கள் பேச்சுவார்த்தைகளில் அவதானம் இருக்க வேண்டும். குடும்பஸ்தர்கட்கு கணவனின் முன்னேற்றமிருப்பினும் திருப்தியடைய மாட்டார்கள்.

அதிஷ்டநாட்கள்: மே 24 பி.ப, 25, 26,
யூன் 5 பி. ப, 6, 7 மு.ப.

துரதிஷ்ட நாட்கள், மே 29 பி.ப, 30, 31,
யூன் 7 பி.ப, 8, 9 மு.ப.



## விருச்சிகம்

**விசாகம் 4ம் கால், அனுஷம், கேட்டை**

இவர்களுக்குச் சூரியன் லோக மூர்த்தியாக 7ல் வலம் வருவதால் தொடர்ந்து கஷ்ட பலன்களே அதிகரிக்கும். 12ல் சனி செவ்வாய் சேர்க்கை அளவிற்கதிமான அலைச்சலைக் கொடுத்து ஆரோக்கியத்தைக் குறைக்கும். சமூகசேவையில் அவமானம் ஏற்படலாம். வெளிநாட்டுத் தொடர்புகளால் எதிர்பார்க்கும் நன்மைகள் வீண் பிரமை போலாகிவிடும். 2-ம் இடத்து வியாழன் மட்டுமே ஓரளவு நன்மையளிக்கக் கூடியதாக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு வியாழன் 2ல் இருப்பதால் கவலைகள் அதிகரிக்க விடமாட்டார். பண வருவாயில் குறைவேற்படாது. களத்திரசுகம், புத்திர சுகமிருப்பினும் மனத்திருப்தியில்லை. கருமங்கள் நினைத்தபடி நிறைவேறாது.

வியாபாரிகட்கு தன ஸ்தானத்தில் வியாழன் வங்கி உதவிகளை அதிகரிப்பார். முதலீடுகளால் போதிய பலனடைவதற்கில்லை. பங்கு வியாபாரிகள் சற்றுச் சிந்தித்துக் காமமாற்றவும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் லோகமூர்த்தியாக இருப்பதால் எவ்வித நன்மைகளும் கிடைப்பதற்கில்லை. நிலைமாற்றம், போதிய வருமானமின்மையால் மனம் வேதனைப்படும்.

விவசாயிகட்கு 12ல் சனி விவசாயத்துக்கு நன்றல்ல. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதில் அலைச்சலுக்கு மேல் அலைச்சல்பட நேரும். வழக்கு விவகாரங்களால் செலவு அதிகமாகும்.

தொழிலாளர்கட்கு தொழில் வளர்ச்சி குன்றும். கடின உழைப்பும் குறைந்த ஊதியமுமே காணப்படும். ஒப்பந்தங்கள் குறித்த தவணையில் முடிவு பெறாது பல சிக்கல்களைக் கொடுக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் சொல்வதற்கில்லை. கலைத்துறை, விளையாட்டுத்துறையிலும் பலவிதமான சோதனைகளை அனுபவிப்பீர்கள். பரீட்சைகளில் சித்திபெற மிகக் கடுமையாக கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களிலீடுபட்டோர் தோல்வியையே சந்திப்பர். கைக்கெட்டியது வாய்க்கெட்டாத கதையாகி விடும். குடும்பஸ்தர் கணவனின் கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொள்ளினும் ஈற்றில் வேற்றுமைகள் தோன்றவே செய்யும்.

அதிஷ்ட நாட்கள்: மே 27, 28, 29 மு. ப.
யூன் 7 பி. ப, 8, 9 பி. ப.

துரதிஷ்ட நாட்கள்: மே 14, 15 மு.ப,
யூன் 1, 2, 9பி.ப, 10, 11மு.ப.



## தனுசு

**மூலம், பூராடம் உத்தராடம் 1-ம் கால்**

தனுராசிக்காரருக்கு சூரியன் சுவர்ண மூர்த்தியாக 6-ல் பலம் பெற்று ராஜபவனி வருவதால் எவ்வித துன்பங்களும் ஏற்படுவதற்கில்லை. திரிகோணராசி சுக்கிரன், புதன் நினைத்தகாரிய வெற்றியையும் மனத்திருப்தியையும் கொடுக்கும். மூர்த்திபலமும், ஸ்தான பலமும் பெற்ற சூரியன் ஆரோக்கியக் குறைபாடு ஏற்பட இடமளியாது. லாபஸ்தான சனி, செவ்வாய் உறவினரால் லாபங்கள் கிடைக்க உதவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானாதிபதி சனி 11-ல் இருப்பதால் பிரிந்த குடும்பங்கள் ஒன்றுசேர வாய்ப்புகள் உருவாகும். புத்திர முன்னேற்றங்களும் உதவிகளும் குறைவின்றி அமையும்.

வியாபாரிகட்கு வியாழன் கவலையின்றி வியாபாரத்தை நடத்த உதவிகளை வழங்கும். வெளி

நாட்டு வர்த்தகமாயினும் உள்நாட்டு வர்த்தகமாயினும் லாபகரமாக இயங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சேவைக்கேற்ற மதிப்பு மேலிடத்தில் கிடைக்கும். விருப்பத்திற்கேற்றவாறு மாற்றங்கள் அமையும்.

விவசாயிகட்கு சனியும் செவ்வாயும் ஒன்று சேர்ந்து பயிர்ச்செய்கைக்கு வேண்டிய உதவிகளை வழங்குவர். தானிய விதைப்போ, பயிர் நடுதலோ எதுவாயினும் பயமின்றி மேற்கொள்ளலாம்.

தொழிலாளர்கட்கு அரச ஒப்பந்தங்கள் கிடைக்க நல்ல வாய்ப்புகளுண்டு. சொந்த தொழில் ஆரம்பிக்க கிரகநிலைகள் சாதகமாகும்.

மாணவர்கட்கு கல்வித்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றமுண்டு. கலை, விஞ்ஞானத்துறைக் கல்விகற்போர் நன்மையடைவர். வேலைவாய்ப்பை நாடுவோர்க்கும் நல்லவாய்ப்புகளுண்டாகும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களுக்கு ஓர் முடிவேற்படும். குடும்பவாழ்வில் பிரிவினையடைந்தோர் ஒன்றுசேருவர். தொழில் பார்ப்போரில் இடை நிறுத்தம் செய்யப்பட்டோராயின் மீண்டும் வேலைகிடைக்கும் சந்தர்ப்பமுண்டு.

அதிஷ்ட நாட்கள்: மே 14,15 மு.ப., 29பி.ப,30,31
யூன் 9 பி. ப. 10, 11 மு.ப.
துரதிஷ்ட ,, மே 14,15 பி.ப, 16,17 மு,ப.
யூன் 3,4,5 மு.ப, 11 பி.ப. 12,13.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.

இவ்விராசியில் ஜனனமானோர்க்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக திரிகோண ராசியில் வலம் வருவதால் கஷ்டங்கள் அதிகமிராது. 4ம், 5ம் இடங்களில் சுக்கிரன் பொருள்பண்ட சேர்க்கைக்கு உதவும். 5ல் சூரியன் அரசாங்க ரீதியான உதவிகளுக்கு நன்று. சனி 10ல் உச்சமடைவதால் அந்தஸ்து, தொழில் உயர்ச்சி ஏற்படும். தேகாரோக்கியம் சீரற்றதாகவே இருக்கும். 11ல் கேது, யுரேனஸ் ஆகிய கிரகங்கள் சேர்ந்தோரால் பண நஷ்டம், பொருள் நஷ்டம் என்பவற்றை ஏற்படுத்தும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி செவ்வாயுடன் கூடி 10-ல் இருப்பதால் பல இன்னல்களுக்கு மத்தியில் அந்தஸ்து, தொழில் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டியிருக்கும்.

வியாபாரிகட்கு புதன் நற்சஞ்சாரம் செய்வதால் வியாபார நடவடிக்கைகள் சிறப்பாக அமையும். வங்கி உதவிகள் குறைவாகவே இருக்கும். பண விடயத்தில் லாபமில்லை.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் பலமிழந்திருப்பதால் காரியசித்தியில்லை. அதிகாரிகள் உத்தரவை மீறி நடக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். சமூகசேவையிலுள்ளோர் பதவி உயர்வடைவர்.

விவசாயிகட்கு சனி 10-ல் இருப்பதால் கஷ்டங்கள் குறைவாயிருக்கும். தானிய விதைப்பு போன்றவற்றால் செலவுகள் அதிகரிக்கும்.

தொழிலாளர்கட்கு புதுத் தொழில்வாய்ப்புகள் கிடைப்பினும் அவற்றை நிறைவேற்றுவது கடினம். சொந்தத் தொழிலை நாடுவோர் பல இடையூறுகளை அனுபவிப்பர்.

மாணவர்கட்கு கல்வியில் எவ்வித முன்னேற்றமும் கிடைப்பதற்கில்லை. உள்ளூர்க் கல்வியை விட வெளியூர்க் கல்வியில் நற்பலன் கிடைக்க இடமுண்டு. கலை விளையாட்டுக்களில் முதலிடம் வகிப்பீர்கள்.

பெண்களுக்கு விவாகப் பலன்கள் குறைவாகவே உள்ளது. முயற்சிகள் பலனளிப்பதற்கில்லை. கன்னியர் ஆடம்பர வாழ்வில் அதிகம் ஈடுபடுவர். வேலை பார்ப்போருக்கு கஷ்டங்கள் ஏற்படினும் பணலாபமுண்டு.

அதிஷ்ட நாட்கள்: மே 15 பி.ப, 16. 17 மு.ப.
யூன் 1, 2, 11 பி.ப, 12, 13.
துரதிஷ்ட நாட்கள். மே 17 பி.ப, 18,19 மு, ப,
யூன் 5 பி.ப, 6, 7 மு.ப.




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3.

இவர்களுக்கு சூரியன் ரஜத மூர்த்தியாக 4ல் பவனி வருவதால் இம்மாதம் கஷ்டபலன்கள் குறையும். சுக்கிர புத சஞ்சாரங்கள் சகோதர ஒற்றுமைக்கும் இனசன உதவிகளுக்கும் ஏற்றதாக

அமையும். 4-ல் சூரியன் சுற்றுடலில் அமைதி நிலவ நன்று. ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானதிபதி வியாழன் லாபஸ்தானத்தில் இருப்பதால் எவ்வித பிரச்சனைகளும் ஏற்படுவதற்கில்லை. களத்திர சுகம் புத்திர சுகமுண்டு.

வியாபாரிகட்கு வங்கி உதவிகளுடன் கூடிய முதலீடுகள் பலிதமடையும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் செய்வோர் நல்ல இலாபம் சம்பாதிப்பதற்கு அறிகுறிகள் உண்டு.

உத்தியோகத்தர்கட்கு பதவி யுயர்வுகள், பணப்புழக்கம் என்பவற்றுல் ஓரளவு மனச்சந்தோஷம் அடையலாம். உங்கள் விருப்பப்படி கருமங்கள் நடைபெறும்.

விவசாயிகட்கு 9-ல் சனி இருப்பதால் நன்மையில்லாவிடினும் பயிர்ச்செய்கையில் எதுவிதமான பாதிப்புமில்லை. விதைப்பு, பயிர்நாட்டல் போன்றவற்றில் கடின உழைப்பை மேற்கொள்ளல் நன்று.

தொழிலாளர்கட்கு செய்தொழிலில் விருத்தியுண்டு. புதுத்தொழில்கள் கிடைப்பதற்கும் நல்ல வாய்ப்புகளுண்டு. சிற்பத்தொழில், தச்சுத் தொழில் செய்வோர் அதிக இலாபங்களைச் சம்பாதிப்பர்.

மாணவர்கட்கு உள்ளூர்க் கல்வியில் சிறப்பு இல்லை. தபால் மூலம் கல்வி பயில்வோர் நன்மையடையலாம். சட்டக்கல்வி, பட்டப்படிப்பு பயில்வோர்க்கு வியாழபகவானின் உதவிகள் கிடைக்கும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்கள் கடிதத் தொடர்பு மூலம் அதிகரிக்கும். குடும்பஸ்தர்கட்கு கணவனின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். வேலை வாய்ப்பை நாடுவோர்க்கு வாய்ப்புகளுண்டு.

அதிஷ்ட நாட்கள்: மே 17 பி. ப, 18, 19 மு. ப,
யூன் 3, 4, 5 மு. ப,

துரதிஷ்ட நாட்கள்: மே 19 பி. ப, 20, 21,
யூன் 7 பி. ப, 8, 9 மு. ப.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி,

மீனராசியைச் சார்ந்தோர்க்கு சூரியன் லோக மூர்த்தியாக சஞ்சரிப்பதால் கஷ்ட பலன்கள் படிப்படியாக அதிகரிக்கும். 12ல் வியாழன் தொழில் மாற்றம் நிலை மாற்றங்களுக்கு நன்று. அட்டமத்துச் சனி, செவ்வாய் சேர்க்கை பொதுஜன விடயங்களில் அவமானத்தைத் தேடித்தரலாம். சுக்கிரன் புதன் 2-ல் பணவருவாயைப் பெருக்கினும் செலவினங்களும் அதற்கேற்ப அதிகரிக்கும். 3ல் சூரியன் சகோதர உதவிகளுக்கும் அயலவரிடையே கொண்டாட்டங்கள் இடம் பெறவும் உதவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பநிலை சீரடைய வழியில்லை. கணவன் மனைவி உறவுக்கும் களத்திர சுகங்களுக்கும் காலம் சாதகமாக இல்லை. கலாசார நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

வியாபாரிகட்கு வியாபார விருத்தியில்லை. முதலீடு செய்வதற்கு பணவசதியிராது. வங்கி உதவிகள் கிடைப்பினும் நல்ல வழிகளில் பயன்படுத்த முடியாது.

உத்தியோகத்தர்கட்கு அரச உதவிகள் கிடைக்காவிடினும் அந்தஸ்தில் எவ்வித பாதிப்புமில்லை. கலாசாரத்துறை வேலை செய்வோருக்கு அமைதியும் சந்தோஷமும் நிலவும்.

விவசாயிகட்கு சனி எவ்விதத்திலும் பயிர்ச் செய்கையில் லாபமடைய விடாது. செவ்வாய் பயிரழிவைக் கொடுக்கும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியில்லை. புதுத்தொழில் கிடைப்பது கடினம். தொழில் மாற்றங்கள் நன்மையளிப்பதாகவில்லை.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் கிடைப்பதற்கில்லை. பட்டப்படிப்பு, சட்டக்கல்வி என்பவற்றிற்கு வியாழன் 10-ல் இருப்பதால் பாதிப்பேற்படாது. ஞாபகசக்திக் குறைவு இருக்கும். விளையாட்டுக்களால் உடலும் உள்ளமும் சோர்வடையும். தபால் கல்விக்கு நன்மையான காலம்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் நாட்டமுடையோரி விரக்தி மனப்பான்மையடைய வேண்டியிருக்கும். கன்னிப் பெண்கள் கலை ஈடுபாட்டில் காலத்தைக் கடத்துவர். குடும்பஸ்தர் கணவனின் அரவணைப்பில் அகமகிழக் காலம் நன்றல்ல. வேலை பார்ப்போருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள்: மே 19 பி. ப, 20, 21,
யூன் 5 பி. ப, 6, 7 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: மே 14, 15 மு.ப, 22, 23,
24 மு. ப, யூன் 9 பி.ப, 10, 11 மு.ப.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

முன் தொடர்ச்சி

## பிறந்த திகதியும் பலன்களும்

5-ம் திகதி: காதல் மன்னர்கள். எதிர்ப்பாளர்களால் அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். வியாபாரம் அல்லது தொழிலில் தந்திரம் இருக்கும். சமூகசேவை, மக்களின் மதிப்பு மிகுந்திருக்கும். தமது கருத்துப்படி எல்லோரும் நடக்கவேண்டும் என விரும்புவர். புதுப்புதுக் காட்சிகள், அழகிய பூங்காவனம், சினிமாப்படம், விளையாட்டு இடங்களில் அடிக்கடி மனம் இலயிக்கும், இரகசியம் காப்பாற்றமாட்டார், எதிலும் பற்றற்றவர்கள் போல நடந்துகொள்வர். ஆராய்ச்சிகள், கண்டு பிடிப்புகள் அதிக பலன் தரும்.

14-ம் திகதி; மக்கள் தொடர்பு அதிகம் ஏற்படும். வரவரப் புகழ் பெருகும். வியாபாரம் வெளிநாட்டுத் தொடர்பு, பொருள் சம்பந்தமான நடவடிக்கைகளிலும், உற்பத்தித் தொழிலிலும் வெற்றி பெறுவர். தனது சொந்தக் கருத்துப்படி நடக்கவேண்டும். உள்ளத்தில் பயம் இருக்கும். பிறருடைய ஆலோசனைகள் வீழ்ச்சியில் கொண்டு போய்விடும். ஆபத்துக்களிலிருந்து காப்பாற்ற இறுதிநேரம் நண்பர்கள் வருவார்கள். தனது மனதில் தோன்றும் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து வந்தால் எதிலும் வெற்றி நடை போடுவார்கள்.

23-ம் திகதி:- "தனிக்காட்டு ராஜா" சமுதாயத்தில் பெரியவர்களாக மதிக்கப்படுவார்கள். இவர்கள் பெருந்தன்மை பெருந்தியவர்களாக நடக்கவேண்டும். சிறிய எண்ணங்கள் செயல்கள் சிலவேளை ஆபத்தில் மாட்டிவிடும். இவர்கள் நேர்மையான வகையில் செயல் புரியின் வெற்றிக்குமேல் வெற்றி ஏற்படும். குறுக்கு வழியில் சென்றால் வெற்றியாகத் தெரிவதெல்லாம் நாளடைவில் பெரும் தோல்வியும் ஏமாற்றமும் ஆகி விடும். எனவே நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். இவர்களைச் சுற்றிப் பலர் இருப்பர். ஏதாவது ஒரு துறையில் அதிகம் புகழடைவர். இறந்த பின்பும் இவருக்கென ஓரிடம் மக்கள் மத்தியில் இருக்கும்.

## தொழில்

சொந்தத் தொழிலைச் செய்தால் முன்னுக்கு வரலாம். பிறரிடம் தொழில் செய்து முன்னேற முடியாது. இவர்கள் சுதந்திரமாகத் தைரியமாகத் தொழிலைச் செய்து முன்னேறலாம்.

சிறந்த வியாபாரிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புகைப்படநிபுணர்கள் கணித வல்லுனர்கள், டாக்டர்கள், மந்திரதந்திரம் தெரிந்தவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள், வியாபாரம் சம்பந்தமான அரச நிறுவனங்களில் பணியாற்றுவோர், இரத்தினக்கல், தங்கம் தொடர்பான வேலைகளைச் செய்வோர். வட்டிக்கடைக்காரர் காசாளர் ஆகியோர் இவ்வெண்ணில் பிறந்துள்ளனர். இவர்கள் தங்கள் தொழிலை அடிக்கடி மாற்றிக்கொள்வர். எங்கு இலாபம் இருக்கின்றதோ, அடுத்த நிமிடமே அம்முயற்சியைத் தொடங்கி விடுவர். மிகப்பெரிய தரகர்களாகுவதும் இவ்வெண்காரர்களேயாகும். மேலும் கிளார்க் தொழில் (எழுது வினைஞர்), மின்சார உபகரணம் சாய்ப்புச் சாமான்கள், புடவை, தோல், மீன், குடிவகை போன்றவை தொடர்பான தொழில்கள், தொழில் நுட்பம், வியாபார இடங்களில் விற்பனையாளர்கள், கமிஷன் வியாபாரம், வெளிநாட்டுத் தொடர்பான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு முன்னேறலாம். ஏற்றுமதி, இறக்குமதி, கப்பல் அல்லது உல்லாசப் பிரயாணிகள் தொடர்பான தொழில்களில் அதிக பொருளைச் சம்பாதிக்கலாம். இயந்திரங்கள் தொடர்பான தொழில்கள் போன்றவற்றில் ஈடுபடலாம். பொதுவாக இவர்கள் எத்தொழிலும் தொடங்கலாம். ஆனால் பணத்தைக் கண்டபடி செலவு செய்யாது அவதான

மாகச் செயல்படுத்த வேண்டும்; நம்பிக்கை, நாணயத்தைக் கட்டிக் காப்பவர்களாயின் மிகச் சிறந்த வியாபாரிகளாக இருப்பார்கள்.

ஆதிக்கப் பலனுள்ளவர்கள் சிறந்த வியாபாரி களாக உலகெங்கும் இருக்கின்றார்கள்.

## (ஆ) எண் 5 கூட்டு ஒற்றை எண் குண இயல்புகள்

வேகமாகத் தொழிற்படும் இவர்கள் ஓடி ஓடிப் பொருள் சேர்ப்பார்கள். பொருளில்லார்க்கு இவ் வுலகம் இல்லை. ஆனால் பொருள் உடையார் எல் லாம் உடையர் அல்லர்; என்று தத்துவம் பேசு வார்கள். நித்தம் மாறுதல்களை விரும்பும் இவர் கள் செய்யும் தொழில், இருக்கும் இடம், பாவிக் கும் பொருட்கள் என்பவற்றை அடிக்கடி மாற் றிக் கொள்வர். வாழ்க்கையில் அடிக்கடி மாறு தல்கள் ஏற்பட்டாலும் அவை முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். காதலிப்பவர்களைக் கைப்பிடிக்கும் இவர்களுக்கு துணை வழியால் பொருள்சேர இட முண்டு. எதையும் தாங்கும் இவர்களுக்குத் தோல்வியே வெற்றியின் முதற்படி என்பது பொருத்தமாகும். சுதந்திரப் பிரியராகவும், மாற் றங்களை இரசிப்பவர்களாகவும் இருப்பதால் பொறுப்பற்றதும், சுதந்திரமானதுமான தொழில் களைச் செய்ய விரும்புவார்கள். இனிக்க இனிக்கப் பேசும் இவர்கள் எவரையும் தமவசமாக்கிக் காரி யங்களைச் சாதிப்பர். அன்புக்கு கட்டுப்படும் இவர் களை அதிகாரத்தாலோ அதட்டலாலோ அடி பணிய வைக்க முடியாது. எதிரிகளையும் அடி பணிய வைக்கும் ஆற்றல் கொண்ட இவர்கள் பணிந்து வருவோரை மன்னித்து விடுவர். கடுகதி வண்டி போல் கருமம் ஆற்றிடினும், தந்திர புத் தியில் தலைசிறந்தவர்கள். இவர்களில் சிலர் பொருட்செலவாலும், வீரியக் குறைவாலும், புத் திர சோகத்தாலும் அவதிப்பட்டு மனோ நிலையும் பாதிக்கப்படும்.

### தொழில்

வியாபாரிகள், அரசியலில் பிரபல்யமானவர் கள், தொழிற்சாலை, உற்பத்தி செய்வதில் கெட் டிக்காரர், நகை, வட்டிக்கடைக்காரரால் அதிக வருமானம் பெருகும். இவர்களுக்கு கமிஷன் வியாபாரம், பங்குத் தொழில்கள் அதிக வெற் றியைத் தரும். ஜனனக் குறிப்பில் மிதுனம், கன்னி, இலக்கினம் அல்லது இராசிகளில் பிறந் தவர்கள் கலை, எழுத்துத் துறைகளில் இலிகிதர் களாகவும், வானொலி, பத்திரிகையில் ஆசிரியர் அல்லது அவ்விடத் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள்.

### நோய்

நரம்புப் பலவீனம். மூளை, தலை, நரம்பு, முள் ளந்தண்டு சம்பந்தமான வீக்கம், வலி ஏற்படும். அண்ட வாய்வு, தைராய்டு சுரப்பி, கழுத்து வீக் கம் ஏற்படும். இருதயவாய்வு, வாத ரோகங் கள் சர்வசாதாரணமாகும். இவர்களுக்கு வரும் நோய்களைச் சிலவேளை டாக்டர்களாலும் கண்டு பிடிக்க முடியாமல் போய்விடும். நேரத்திற்கு உணவு உண்டால் இரைப்பை குடல் சம்பந்த மான நோய்கள் வராது பாதுகாக்கலாம். மனோ வைத்தியம் சிறந்த பயனைத் தரும்.

### உணவு

கஸ்க்கொட்டை, முந்திரிகைப் பருப்பு, முருங் கையிலை, நல்லெண்ணெய், நெய், மீன், கரட், கீரை, பச்சைக் காய்கறி வகைகள், பருப்புவகை, கடலை வகை, தேசிக்காய் அல்லது ஊறுகாய் என்பவற்றை அடிக்கடி சாப்பாட்டில் சேர்த்து வரவும். வாய்வால் அடிக்கடி நெஞ்சு முட்டாக இருக்கும். இஞ்சி, உள்ளி, பெருங்காயம் என்ப வற்றை உணவுடன் சேர்த்துவர வேண்டும்.

## பெயர் எண்கள் கூட்டு எண்களினால் வரும் பலன்கள்

எண் 14: முன்னேற்றமும் மாற்றமும் ஏற் படும். வாழ்க்கையில் வளத்தைக் கொடுக்கும் எண் ஆகும். எல்லோரும் வசிகரமான இவர் களைத் தேடி ஓடி வருவார்கள். பல ஜாதி, இன மக்களிடமிருந்தும் உதவிகள் கிடைக்கும். இவ ரைப் பற்றி அனேகர் அறிந்தவர்களாக இருப்பார் கள். நெருப்பு, நீர், காற்று, மின்னல் ஆகிய இயற்கைச் சக்திகளால் ஆபத்துக்கள் ஏற்பட இடமுண்டு. தெய்வ சக்தியால் பல கஷ்டங்கள் இயற்கையாகவே நீங்கும். போக்குவரத்து, வெளி நாட்டுத் தொடர்பு, கடல் சம்பந்தமான தொழில் கள், வியாபாரம் என்பவற்றால் சிறப்படைய இட முண்டு. பங்கு வியாபாரம், நண்பர்களின் உதவி களால் சிறப்படைவார்கள். எப்பொழுதும் தனது சொந்தக் கருத்துப்படி நடத்தல் வேண் டும். பிறரின் ஆலோசனை இந்த எண்காரருக்கு தோல்வி மரியாதையீனங்களை ஏற்படச் செய்யக் கூடியது. தன் கையே தனக்குதவி என்பது இவர்களின் மந்திரமாகும். அவசரம் கூடாது.

(தொடரும்)

# செவ்வாய் தோஷம்

வே. சின்னத்துரை, நல்லூர்.

(சென்ற இதழ் தொடர்)

| | | | |
|---|---|---|---|
| சூ, ரா, ல | பு | | வி |
| வெ | ஆண் | | செ |
| | | | |
| சனி | | சந் | கே |

லக்கினம் மீனம் செவ்வாய் கடகம் 5 ல்
சந்திரன் துலாம் ,, 10 ல்
வெள்ளி கும்பம் ,, 6 ல்

இதுவும் ஒரு சுத்த சாதகம்.

| | | | |
|---|---|---|---|
| | சந்,வெ | சூ,செ,பு | கே |
| சனி,ல | பெண் | | |
| | | | |
| ரா | வி | | |

லக்கினம் கும்பம் செவ்வாய் இடபம் 4 ல்
சந்திரன் மேடம் ,, 2 ல்
வெள்ளி மேடம் ,, 2 ல்

இங்கு மூன்றிடத்திலிருந்தும் செவ்வாய் குற்றப்பட்டது. ஆனல் விதிவிலக்கு 4 ன் கீழ் 4 ல் குற்றம் நீக்கப்பட்டது. 2 ல் குற்றம் விதிவிலக்கு 10 ல் நீக்கப்பட்டது.

இச்சோடியும் இப்போ 25 வருடத்திற்கு மேலாக சகல சுகங்களுடன் வாழ்கிறர்கள். இவர்களுக்கு ஒரே ஒரு குறைபாடு மாத்திரம் தான்; இவர்களுக்கு புத்திரபாக்கியம் இன்னும் இல்லை. இதற்கு செவ்வாய் தோஷம் காரணமல்ல. இச் சுத்த சாதகரின் சாதகத்தின்படி இறந்த ஜீவ அணுக்களே விந்தில் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | கே | | சந்,ல |
| | ஆண் | | வி |
| | | | சனி |
| சூ, பு | வெ | ரா | செ |

லக்கினம் மிதுனம் செவ்வாய் கன்னி 4-ல்
சந்திரன் மிதுனம் ,, 4-ல்
வெள்ளி விருச்சிகம் ,, 11-ல்

இங்கு 4 ல் செவ்வாய் குற்றம் விதி விலக்கு 10-ல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | பு,சூ,வெ |
| | பெண் | | செ,ரா,ல |
| கே | | | |
| வி | | சனி | |

லக்கினம் கர்க்கடகம் செவ்வாய் கடகம் 1-ல்
சந்திரன் மேடம் ,, 4-ல்
வெள்ளி மிதுனம் ,, 2-ல்

இங்கு மூன்றிடத்திலிருந்தும் செவ்வாய் குற்ற மேற்பட்டது. இது விதிவிலக்கு 2 ல் நீக்கப்பட்டது.

ஏழ்மையாகப் பிறந்த இச்சோடி நடுத்தர வகுப்பிற்கும் கொஞ்சம் குறைவாகவே வாழ்ந்து அனேக மக்களைப் பெற்று சீரும் சிறப்புமாக சந்தோஷமாக இப்போ 40 வருடகாலமாக வாழ்கிறர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | செ | சூ,பு,வெ |
| ரா | ஆண் | | வி,ல |
| சனி | | | கே |
| | | சந் | |

லக்கினம் கர்க்கடகம் செவ்வாய் இடபம் 11-ல்
சந்திரன் துலாம் ,, 8-ல்
வெள்ளி மிதுனம் ,, 12-ல்

இங்கு 8ல் தோஷம் விதி விலக்கு 10 தினுலும் 12 ல் குற்றம் விதி விலக்கு 4 லினுலும் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | ல | | கே |
| சனி,செ | பெண் | | |
| பு,சூ | | | |
| ரா | வெ,வி,சந் | | |

லக்னம் மேடம் செவ்வாய் கும்பம் 11-ல்
சந்திரன் விருச்சிகம் ,, 4-ல்
வெள்ளி விருச்சிகம் ,, 4-ல்

இங்கு 4 ல் குற்றம் விதி விலக்கு 2 ஞல் நீக்கப்பட்டது.

இச்சோடி ஒரு காதல் திருமணம் செய்தனர். இருவரும் அரசாங்க சேவையில் இருந்தனர். இவர்களும் 23 வருடங்களுக்கு மேலாக நல்ல தாம்பத்திய வாழ்க்கை நடத்தினர்கள். இவர்க

ளுக்கும் பிள்ளைப் பாக்கியமில்லை. இப்போது அண்மையில் தான் கணவன் நோயாளியாகி மரணமெய்தினர்.

| | | | |
|---|---|---|---|
| | கே | வெ | சூ,பு,செ |
| | ஆண் | | |
| | | | வி,ல,சனி |
| | | சந்,ரா | |

லக்னம் சிங்கம் செவ்வாய் மிதுனம் 11-ல்
சந்திரன் துலாம் ,, 9-ல்
வெள்ளி இடபம் ,, 2-ல்

இங்கு 2ல் செவ்வாய் குற்றம் விதிவிலக்கு 3 ல் குற்றம் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | ல,ரா | வி | |
| வெ,சூ | பெண் | | |
| பு,செ | | | |
| சனி | | கே | சந் |

லக்கினம் மேடம் செவ்வாய் மகரம் 10-ல்
சந்திரன் கன்னி ,, 5-ல்
வெள்ளி கும்பம் ,, 12-ல்

இங்கு 12 ல் குற்றம் விதிவிலக்கு 2 ல் குற்றம் நீக்கப்பட்டது.

இச்சோடியும் காதல் மணமே. இற்றைக்கு 39 வருடத்திற்கு மேலாக நல்ல சுமுக வாழ்க்கை நடத்துகிருர்கள். மனைவி இப்போ வருத்தவாளி யாய் விட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சந் | ரா | | வி |
| | ஆண் | | செ |
| | | | |
| சனி | வெ | கே | ல,சூ,பு |

லக்கினம் கன்னி செவ்வாய் கடகம் 11-ல்
சந்திரன் மீனம் ,, 5-ல்
வெள்ளி விருச்சிகம் ,, 9-ல்

இது ஒரு சுத்த சாதகம்

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | பெண் | | கே |
| சனி,ரா | | | சந் |
| | வெ | பு,வி | செ |

லக்கினம் இடபம் செவ்வாய் கன்னி 5-ல்
சந்திரன் சிங்கம் ,, 2-ல்
வெள்ளி விருச்சிகம் ,, 11-ல்

இங்கு 2ல் செவ்வாய் விதி விலக்கு 3ல் குற்றம் நீக்கப்பட்டது.

இப்போ 24 வருடங்களுக்கு மேலாக சகல செள பாக்கியங்களுடனும் வாழுகிருர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | | ரா |
| | ஆண் | | |
| பு,சூ,சந் | | | வி |
| வெ,ல,கே | செ | | |

லக்னம் தனு செவ்வாய் விருச்சிகம் 12ல்
சந்திரன் மகரம் ,, 11ல்
வெள்ளி தனு ,, 12ல்

இங்கு 12ல் செவ்வாய் குற்றம் விதி விலக்கு 1ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | கே | வி |
| | பெண் | | |
| செ | | | சனி |
| வெ,சூ | பு,ரா,சந் ல | | |

லக்னம் விருச்சிகம் செவ்வாய் மகரம் 3ல்
சந்திரன் விருச்சிகம் ,, 3ல்
வெள்ளி தனு ,, 2ல்

இங்கு 2ல் செவ்வாய் குற்றம் விதிவிலக்கு 2 ஆல் நீக்கப்பட்டது.

இவ்விருவரும் ஒருவித பிணக்குமில்லாமல் பூரண ஆயுள்காலம் வாழ்ந்தார்கள். கணவன் மாத்திரம் உத்தியோகத்திலிருந்து 60 வயதின் பின் ஓய்வு பெற்று பல வருடங்கள் ஓய்வூதியம் அனு பவித்து பின் பூரண ஆயுளில் நோய்வாய்ப்பட்டு மரணமாஞர். சகல செளபாக்கியத்துடனும் வாழ்ந்தார்கள். (தொடரும்)

ஓர் ஜாதகத்தில் எல்லாக் கிரகங்களும் சர ராசியில் இருந்தால் ரச்சு யோகம் ஆகும். இதனுல் ஜாதகர் பிறதேசம் சென்று சீவிப்பார். பிறர் பொருளை அபகரிப்பார்.

எல்லாக் கிரகங்களும் ஸ்திர ராசிகளில் இருந் தால் முசலயோகம் எனப்படும். அரசாங்க உத்தி யோகம், புகழ், பெரியோர் மதிப்பு ஏற்படும்.

எல்லாக் கிரகங்களும் உபய ராசியில் இருந் தால் நளயோகம் ஆகும். வட்டிக்குப் பணம் கொடுத்துச் சீவிப்பார். நிபுணத்துவம் காரண மாகவும் பொருள் சேகரிப்பர்.

# ஆய்வு மன்றம்

க. தேசோமயானந்தம்,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

எதிர்வரும் 1985 (January) ஜனவரி 10 வரையும் கோசரசஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. அதன்பின் முயன்றால் எண்ணம் நிறைவுபெறும்.

பூ. பிரியதர்சினி
'வசந்தகிரி' கல்லடி உப்போடை, மட்டக்களப்பு

பக்தி என்று சொல்வதும் பக்தியாய் செயல்படுவதும் ஆண்டவனுக்கே தெரியும்! உண்மையான தெய்வபக்தியால் மாத்திரமே எதனையும் சாதித்து வெற்றிபெறுவது திண்ணம். சாதகப்படி நாளும் கோளும் உண்மையான தெய்வ பக்தர்களுக்கு என்ன செய்யமுடியும்?

வ. வேலாயுதன், '' திருவேரகம் '' உடுப்பிட்டி.

காலத்துக்கு ஒவ்வாத பழைமைகளை நீக்கி, புதுமைகளைப் புகுத்திக் கல்வி கற்பிக்கும் தாங்கள், உங்கள் சாதகவிஷயத்திலும் காலத்துக்கு ஒவ்வாத பழமைகளைவிட்டு, தர்க்க ரீதியாக ஏற்கக்கூடிய திருக்கணித முறையில் கணிப்பித்தால், சரியான பலன்களைத் தெரிந்துகொள்ளலாம்!

ஞா. சுகுமாரன் 140 ஓர்சில் வீதி, திருகோணமலை.

தற்போது உமக்குக் கோசரசஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. ஏழரைச் சனீஸ்வரனின் காலம் 1990 March (பங்குனி) 23 வரையும் தொடருகின்றது. உண்மையான தெய்வபக்தியில் குலதெய்வத்தை வழிபடுவதால் 'நாளென் செய்யும்? வினைதான் என் செய்யும்?'' எல்லாம் நன்மையாக அமையும்தானே!

மாணிக்கம் சண்முகநாதன்
சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.

உமது எதிர்காலம் சிறப்பாக அமையக் கூடியதாகச் சாதகமான அமைப்பில் கிரகநிலை காணப்படுகின்றது. சுயமுயற்சியால் கல்வியிலும் முன்னேறலாம். '' ஊக்கமது கைவிடேல் ''

சி. அரசரத்தினம்,
''அமிழ்தகம்'' சங்குவேலி, மானிப்பாய்.

மாரகத்தின் திசையறிய...... ''என்ற பாடலில்'' பேருதித்த ஆறும் திசை அரசன் ஆறும்...... '' என்று வருதலின் உமக்குக் குருதசை 6-ம் திசையாக அமையாமல் 7-ம் திசையாக வருதலின் குருதசை குருபுத்தியில் மாரகம் நிகழ இடமில்லையே! வீண்கவலைகளை நீக்கிக் கடவுளை நம்பிக்கடமைகளைச் செய்துவாருங்கள்.

சி. மரியபாக்கியராணி,
தோலகட்டி வசாவிளான்.

உமது சாதகத்தில் கிரகநிலை: இலக்கினம் மீனம். இலக்கினத்தில் சூரியன், 2-ல் (மேடம்) சுக்கிரன்; 5-ல் (கடகம்) ராகு; 6-ல் (சிங்கம்) யுரேனஸ் - புளுட்டோ, 8-ல் (துலாம்) நெப்ரியூன் 10-ல் (தனு) சந்திரன், 11-ல் (மகரம்) சனி - கேது 12-ல் (கும்பம்) செவ்வாய் - புதன் - குரு என அமைகிறது. மற்றும் உங்கள் பிரச்சினைகளைத் தரமான கணிதசோதிடரிடம் நேரில் சென்று ஆராய்வதால் - மன ஆறுதல் பெறுவதுடன், போலிச் சோதிடர்களால் வரும் ஆபத்துக்களையும் உணருவீர்கள்.

K. சூரியகுமார், அரசபவனம், வசாவிளான்.

உங்கள் செனனநேரம் யுத்தகால நேரமா அல்லது பழையநேரமா என்பது தெளிவாகவில்லையே! அன்று புதன் வக்கிரகதியில் அஸ்தமனமாகவே இருந்தது. மேல் விபரங்களுக்கு இப்பகுதியில் இடம் போதாமையால் ஆராயமுடியமையை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

விமலாவதி ஜெயசுந்தரம்,
15, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.

பக்தி சிரத்தையுடன் நவக்கிரக - முக்கியமாகச் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் பிரீதியுடன் திருமால், இலட்சுமி, முருகன் வழிபாடுகளும் செய்து கொண்டு முயற்சியும் செய்தால் நடப்பு 1984-ம் வருடத்திலேயே விவாகசித்தி உண்டாகலாம்.

கு. பிரபாகர், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

1964-01-05 இரவு மணி 10 நிமிஷம் 04 (நாழிகை 38 விநாடி 52-ல்) அத்தம் உதயமாகின்றது. அன்று இரவு மணி 11 நிமிஷம் 35-ல் உமது செனனநேரம் என்று குறிப்பிடப்படுவதால் உமது செனன நட்சத்திரம் அத்தம் 1-ம் பாதமேயாகும்.

# அன்னையைக் கண்டேன் - 27

"ஆனந்தபைரவி"

## ★ நாச்சிமார் எனவழங்கும் நாயகி காமாக்ஷித் தாயார் ★

'கங்கையார் சடையானைக் காசினியில் பூசனைசெய்
மங்கையார் காமாட்சி மாதேவி மருவுமிடம்
செங்கையால் நாச்சிமார் சிறுவிறகை ஒடித்தாளின்
தொங்கையாய்த் தொளிர்வண்ணைக் குளங்கரைசார் மருதடியே'

— விஸ்வகுலதிலக. ந. சிவக்கொழுந்து

யாழ்ப்பாணத்தின் சூழலில் இருக்கும் ஆலயங்கள் பலவற்றையும் தரிசித்து நமது தொடரை எழுதும்போது நாச்சிமார் கோயிலைப் பற்றியும் எழுதவேண்டுமென்ற ஆவல் இருந்தது. சுமார் ஒருவருட காலத்துக்கு முன்னரே யாழ் - கன்றுதிட்டி காளிகோயில் பற்றி எழுதிவிட்டோம். காளிகோயிலுக்கு நாம் போனபொழுதே அவ்வாலய நிர்வாகத்துடன் தொடர்பான ஓர் அன்பர் திரு. நாராயணசாமி அவர்கள் நாச்சிமார் கோயிலுக்கும் சென்று வரும்படி வேண்டி அவ்வாலயத் தேர் மலர் ஒன்றையும் தந்துதவினூர்.

ஆனுல் அதற்குப் பிறகு பல தடவைகள் முயன்றும் ஏனே அங்கு போகும் வாய்ப்புக்கிடைக்கவில்லை. திருகோணமலை, கொழும்பு போன்ற வெளியூர் ஆலயங்களுக்கெல்லாம் போய் வந்த நாம் நாச்சிமார்தேவியை நாடிச்சென்றேம் கடந்த மாதம்.

யாழ்ப்பாணம் - வண்ணர்பண்ணை - குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயமே நாச்சிமார்கோயில் எனவழைக்கப்படுகிறது. இதில் அதிசயமான சிறப்பு என்னவென்ருல் கடந்த மாதம் ஓர் மீனுட்சி அம்மனைப்பற்றி எழுதியவுடன் இம்மாதம் காமாக்ஷி அம்மனைப்பற்றி எழுதும் சந்தர்ப்பம் வந்திருக்கிறது.

பராசக்தி மீனுக்ஷி என்ற வடிவம் தாங்கும் போது தீதெலாம் களைந்து நீதிநெறிகளை நிலைபெறச் செய்கிருள். காமாக்ஷி என்ற வடிவம் பெறும் பொழுது முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கிருள்.

இடதுகரங்களில் பாசமும், புஷ்பமும், வலது கரங்களில் அங்குசமும், கரும்பும் கொண்டு சாந்த மூர்த்தமாக அமைவது காமாக்ஷி வடிவம்.

வண்ணையில் அமர்ந்த காமாக்ஷியும் இவ்வுருவில் கருணை ஒழுகக் காட்சியளிக்கிருள். முன்னே நந்தி, பலிபீடம், ஸ்தம்பம் யாவும் அமைந்துள்ளன. இவற்றைவிட மஹா மண்டபத்திலும் ஓர் சிறிய நந்தியும் பலிபீடமும் காணப்படுகின்றன. தெற்கு நோக்கி எழுந்தருளி விக்ரகங்களுடன் சிறிய ஒரு மஹாமாரி மூர்த்தமும் காட்சியளிக்கிறது. பிரதி வாரமும் சுக்கிரவாரபூசை இந்த மாரியம்மனுக்கு விசேஷமாக நடக்கும். வைகாசி பொங்கலும் மாரியம்மனுக்கே உரியது.

ஆலய வாசலுடன் பாகசாலை, அலுவலகம் என்பவையும் வலதுபுறம் வஸந்த மண்டபம், யாகசாலை, பைரவர்சந்நிதானம் என்பன உள்ளன. வீதி வலம் வரும்போது நிறையசந்நிதானங்களை அவதானிக்கிறேம். விநாயகர், மஹாவிஷ்ணு முருகன், லக்ஷ்மி, துர்க்கை, நவக்ரஹம் ஆகியவற்றுடன் விஸ்வப்ரம்மாவுக்கும் ஒரு தனி சந்நிதானம் காணப்படுகிறது.

இவ்வாலயம் விஸ்வப்ரம்ம குலத்தவர்களின் பரிபாலனத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

உள்வீதி பூராவும் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. சுவர்களில் அழகிய வண்ண ஓவியங்களாக லக்ஷ்மி, சரஸ்வதி, ஆகியோர் காணப்படுகின்றனர், பாடல்கள் அழகுற எழுதப்பட்டுள்ளன. கோபுரவாசலைக் கடந்து உள்ளே நுழைந்தவுடன் வாசலின் இருபுறமும் வாணியும், லக்ஷ்மியும் வரையப்பட்டிருப்பது "ஸசாமர ரமா

வாணீ ஸவ்யதக்ஷிண சேவிதா'' என்று லலிதா ஸகஸ்ர நாமத்தை நினைவூட்டுகிறது.

ராஜகோபுர வேலைகள் நடைபெறுகின்றன. சித்திராபூரணைத் தீர்த்தமாக வைத்து மஹோற்சவம் நடக்கிறது. ஆடிப்பூரம் சங்காபிஷேகத்துடன் லக்ஷார்ச்சனை பூர்த்தியடையும். தைப்பூச கும்பாபிஷேகத்தினத்திலும் சங்காபிஷேகம் நிகழ்கிறது. மஹோற்சவத்திற்கு மு... அம்பிகை மஹாமாரி நகர்வலம் வருகிறாள்.

திருவெம்பாவை, நவராத்திரி முதலியனவும் சிறப்பாக நடைபெறுகின்றன. 1971 ம் ஆண்டிலே புதிய சித்திரத்தேர், அமைத்து முடிந்தபோது வெளியிடப்பட்ட மலரிலிருந்து ஆலயத்தின் வரலாற்று விபரங்களை அறிகிறோம்.

மிகப்பழங்காலத்தில் இக்கோயில் அமைந்திருக்கும் இடம் குளங்கரை எனப்பட்டது; அங்கே நாவல் மருதமரங்கள் அடர்ந்திருந்தன. ஒருநாள் அவ்விடத்திற்கு விறகு ஒடிக்க வந்த மங்கை ஒருத்தி மருதமரத்தடியில் சிறுநீர் கழித்து அசுத்தப்படுத்தி விட்டாள். இதனால் அவ்விடத்திலிருந்த தேவதை சீற்றங்கொண்டு அவ்விளமங்கையின் மார்பகத்தைக் திருகிவிட்டதாம்.

இவ்விபர மறிந்தவுடன் அவ்விடத்திலிருந்த விஸ்வகுல வயோதிப மாது ஒருவர் அத்தேவதையை சாந்தப்படுத்தும் நோக்கில் அந்தமரத்தடியை சுத்தம் செய்து ஓர் கல்லை அங்கேவைத்து விளக்கேற்றிவந்தார். இதனைத்தொடர்ந்து கிராம மக்கள் பலரும் வழிபாடியற்றலானார்கள்.

பிறகு படிப்படியாக வளர்ந்து 1870 இல் சிறு கல்கட்டடமாக ஆலயத்தை அமைத்து மாரியம்மன் சிலையை பிரதிஷ்டை செய்தனர். பிறகு இவ்விடத்தைச் சூழவும் வசிக்கும் விஸ்வகுலத்தவரான பொற்றொழிலாளர்கள் தம் குலதெய்வமாகிய காமாக்ஷி அம்பாளை வைத்து வழிபட விரும்பினர்.

அக்காலத்தில் இந்திய யாத்திரை மேற்கொண்ட க. வைத்திலிங்கப்பத்தர் என்பவர் சுவாமி மலையிலிருந்த சிற்பாசாரியார் திரு. கண்ணையா அவர்களிடமிருந்து பெற்ற காமாக்ஷி அம்மன் சிலை ஒன்றைக் கொண்டுவந்தார்.

இச்சிலை தான் இன்று ஆலய மூலஸ்தானத்தில் காணப்படும் அம்பிகையின் சிலையாகும்.

1887, 1926, 1967, ஆகிய ஆண்டுகளில் மஹா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன.

பரிபாலன சபையினரின் நிர்வாகத்தில் பிராம்மணர்களின் நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகளுடன் ஆலயம் அருள் துலங்குகிறது. அவளருள் பெற்ற நிறைவுடன் நான் அடுத்த திருத்தலம் நாடி அடி வைக்கிறோம்.

---

## ஜோதிடத்தில் 'விட்டமின் D'

பூமியைவிட பன்மடங்கு ஒளிமிக்க கிரகம் சூரியன். அக்கால முனிவர்களின் மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய நிலைகளைத் தவிர்த்து ஒளிமிக்க பலம்பெற்ற கிரகமாய் விளங்குகின்றது. மனிதனின் வாழ்வில் ஏன் மிருகங்களின் வாழ்க்கையிலும் இல்லாத சக்தி, திறமை, வீரியம் இவை தாமே வந்து பற்றிக்கொள்கின்றன. என்றும் பதினாறுகக் குன்றா இளமையுடன் காட்சி தருவது இக்கிரகத்தின் வலிமை. சூரியவழிபாட்டால் கர்ம வினைகளும் அத்துடன் பிறவித்தோஷமான நாக சாபம், வியாழனைச் சனி பார்வை, சூரிய சுக்கிரன் சேர்க்கை, லக்கினாதிபன் மறைவு முதலிய குற்றங்களும் நீங்குகின்றன. தற்கால விஞ்ஞானயுகத்தில் சூரிய வழிபாட்டால் கண்பார்வை கூர்மை பெறுவதும் இரத்தவிருத்தி ஏற்படுவது உண்மை என்பது விஞ்ஞான ஆராய்ச்சிமுடிபு. உடலில் சூரிய கிரணங்கள்படுவதால் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு ஆயுள் கூடுவதாகவும் சூரிய ஒளியில் இருந்து பெறும் உயிர்ச்சத்து D (Vitamin D) கத்தரிப்பூக்கிரணங்களில் (Ultra - Voilet rays) அதிகமுண்டென்றும் விஞ்ஞான ஆராய்ச்சியாளர் திடமாக நம்புகின்றனர். இதனாலே மேல்நாட்டவர் கீழ்நாடுகளுக்கு வரும்போது 'சூரிய குளிப்பு' (Sun Bath) எடுக்கின்றனர் போலும். ஏன் நம் முன்னோர்கள் குழந்தை பிறந்தபின் ஜாதகர்மம் நாமகரணம் எனும் கிரியையின்போது உபநிஷ்க்ரமணம் என்னும் கிரியையில் குழந்தையை சூரிய வெளிச்சம் படும்படி வீட்டுக்கு வெளியே முதன் முதல் கொண்டுவருவதும், குழந்தைக்கு உடல் முழுதும் நல்லெண்ணை பூசி வெற்றுடம்புடன் இளம் சூரிய ஒளியில் கிடத்துவதும் இக்கூற்றை உறுதிப்படுத்துவதாகத் தெரிகின்றது.

— லலிதாசிவம்

# தினப் பொருத்தம்

## எப்படி அமைதல் வேண்டும்?

பவானி - பருத்தித்துறை

மாசி இதழ்த் தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| சூரி 28 53<br>XI 23 31<br>சுக் 22 55<br>பு(வ)22 33 | XII 26 24 | குரு 4 35<br>I 27 57<br>ரா 23 34 | II 23 13 |
| X 20 33<br>சனி 19 38 | பெண் - I<br>12-4-1965<br>[80 E 15 & 9 N 50] | | III 21 22 |
| IX 21 22 | ஜனன நேரம் காலை<br>9 ம. 47 நி. 35 செ.<br>அயனும்சம்<br>23° 10′ | | சந்தி 10 23<br>செ(வ 15 56<br>யுரே 18 06<br>IV 20 33 |
| VIII 23 13 | VII 27 57<br>கே 23 24 | VI 26 24 | V 23 31 |

ஜனனத்தின்போது நின்ற தசை: கேதுதசை 1 வருடம் 6 மாதம் 18 நாள்.

| | | | |
|---|---|---|---|
| V 6 31 | சுக் 1 04<br>VI 7 18 | புத 18 38<br>சூரி 13 45<br>VII 5 15 | VIII 3 57 |
| IV 4 20 | ஆண் I<br>28-5-1953<br>[9N 50 & 80E 15] | | IX 3 16<br>கேது 13 10 |
| ராகு 13 10<br>III 3 16 | ஜனன நேரம்<br>பி.ப. 5ம. 44நி. 34செ.<br>அயனும்சம் 23° 06′ | | X 4 20 |
| II தி 3 57 | I 5 15<br>சந் 11 19 | XII 7 18 | XII 6 31<br>சனி 28 00<br>நெப் 28 20 |

ஜனனத்தின்போது நின்ற தசை: சனி தசை 7 வருடம் 7 மாதம் 15 நாள்.

ஆண் சாதகத்தில் சந்திரன் சனிக்குரிய அனுஷ நட்சத்திரத்தில் நிற்கிறான். இச்சனி பெண் சாதகத்தில் 10-ம் முனையில் நிற்கிறான். 10-ம் வீடு சுபவீடாகும். கணவனின் சிந்தனை, மனோநிலையாவும் பெண்ணின் கர்மத்தை முடுக்கிவிடும். அதனால் பெயர், புகழ் யாவும் உண்டாம். பெண் சாதகத்தில் சந்திரன் கேதுவிற்குரிய மக நட்சத்திரத்தில் நிற்கிறான். இக் கேது ஆண் சாதகத்தில் 9-ல் நிற்கிறான். பெண்ணின் சிந்தனை, கணவனின் சமயப் பிடிப்பையும் பூர்வபுண்ணியத்தையும் வெளிக்கொண்டுவிடும்.

பெண்ணின் மக நட்சத்திரத்திலிருந்து ஆணின் அனுச நட்சத்திரம் 8-ம் நட்சத்திரமாக அமைவதால் மரபு முறைப்படி தினப்பொருத்தமும் காணப்பட்டது. ஆண் பெண் சாதகங்களில் 9-ம் 10-ம் வீடுகளின் பலன்கள் பரிமளிப்பதால் இல்வாழ்க்கைக்கு அவைகள் நற்பலன்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் இல்லற இன்பத்திற்கு 9-ம் 10-ம் வீடுகள் நல்லவைகளா? பிராப்தம் இருந்ததால் இம் மாப்பிள்ளையை சாதகி மணம் முடிக்க நேர்ந்தது.

பொன்மேனி! பூத்துக் குலுங்கும் அழகு! சுருங்கக் கூறில் அழகு சாதகியிடத்தில் அரசாங்கம் நடத்துகின்றது. சகல வசதிகளும் உண்டு. படிப்புத்தான் சிறிது குறைவு: பெரிய இடத்தில் நல்ல நிலையில் உள்ள மாப்பிள்ளையை கைபிடித்திருக்கலாம்: விதிதான் விட்டதா? பிராப்தத்தின் விளையாட்டை வேறொரு கட்டத்தில் விளக்குகின்றேன்.

**முக்கியகுறிப்பு:**

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் க்கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

| | | | |
|---|---|---|---|
| கேது 24 39 | I 3 03 | II 4 05 | III 1 25<br>IV 27 47 |
| XII 28 18<br>யுரே 13 16 | **ஆண் II**<br>**24-10-1921**<br>*[80E 15 & 9N 50]* | | சந் 11 59<br>நெப் 23 09<br>V 26 07 |
| XI 26 07 | ஜனன நேரம்<br>[illegible].ப. 5ம. 28நி. [illegible]4செ<br>அயனாம்சம் [illegible]8° 39′ | | VI 28 18<br>செ 29 14 |
| X 27 47<br>IX 1 25 | VIII 4 05 | புத 22 13<br>சூரி 7 53<br>VII 3 03 | சனி 9 21<br>சுக் 12 01<br>குரு 13 26<br>ராகு 24 39 |

ஜனனத்தின்போது நின்ற தசை:
**6 வருடம் 8 மாதம் 6 நாள்.**

| | | | |
|---|---|---|---|
| யுரே 10 59<br>VI 2 55 | VII 3 14<br>குரு 10 02 | VIII 2 56<br>ரா 7 51 | IX 2 51<br>செ(வ 16 18 |
| V 1 32 | **பெண் - II**<br>**18-11-1928**<br>[80 E 15 & 9 N 50] | | X 1 11 |
| சந்தி 2 42<br>IV 1 11 | ஜனன நேரம் காலை<br>4 ம. 02 நி. 41 செ.<br>அயனாம்சம்<br>22° 45′ | | XI 1 32<br>நெ 8 34 |
| சுக் 8 05<br>III 2 51 | சூரி 2 34<br>II 2 56<br>கே 7 51<br>சனி 25 49 | புத 16 07<br>I 3 14 | XII 2 55 |

ஜனனத்தின்போது நின்ற தசை: சூரியதசை
3 வருடம் 3 மாதம் 13 நாள்.

ஆண் சாதகத்தில் சந்திரன், சனிக்குரிய பூச நட்சத்திரத்தில் நிற்கிறான். இச்சனி பெண்சாதகத்தில் குடும்பவீடாகிய 2ல் நிற்கிறான். இது நல்ல அமைப்பாகும்.

பெண் சாதகத்தில் சந்திரன் சூரியனுக்குரிய உத்தராட நட்சத்திரத்தில் நிற்கிறான். இச் சூரியன் ஆண் சாதகத்தில், வாழ்க்கைத் துணைவர் போகம் முதலியவைகளைக் குறிக்கும் 7ம் பாவத்தில் இருக்கிறான்.

இதனால் இவர்களுக்குள் மிக நல்ல நட்சத்திரப் பொருத்தமுண்டு. என்னதான் கஷ்டங்கள் வந்த போதிலும் நல்லகுடும்பமாக வாழ்ந்து காட்டுகின்றார்கள். சாதகியிடம் அன்றும் இன்றும் அதே கவர்ச்சி ஆட்சி புரிகின்றது. 2-ம், 7-ம் வீடுகள் சம்பந்தப்படுவதால் இல்லற இன்பத்திற்குக் குறைவேயில்லை.

மரபு முறையின்படி ஆணின் (பூசம்) நட்சத்திரம் பெண்ணின் (உத்திராடம்) நட்சத்திரத்தில் இருந்து 6ம் நட்சத்திரமாய் அமைவதால் நல்ல நட்சத்திரப் பொருத்தமும் உண்டு. கல்யாணப் பொருத்தங்களில் தினப் பொருத்தம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதை கிருஷ்ணமூர்த்தி பத்ததியும் ஏற்றுக்கொள்கிறது. அதை அணுகும் முறைதான் வேறு! திருமணம் உண்டா? இல்லையா? என்ற விவாதம் அன்று தொடக்கம் வளர்ந்து வருகிறது. "திருமணங்கள் சொர்க்கத்தில் தான் நிச்சயிக்கப்படுகின்றன" என்று கூறி அவைகளை அணுகும் முறைகளையும் காலங்களையும் விளக்கிப் பிரச்சினைகளுக்கு K.P. முறைதான் முற்றுப்புள்ளி வைத்தது.

# மணப் பந்தல்

| | | | |
|---|---|---|---|
| | | குரு | கே |
| புத | கிரகநிலை | | |
| சூ, சு<br>சந் | | | ல |
| ரா | செ | சனி | |

**ஜாதகம் 61 பெண்**

**பிறந்த திகதி: 3-2-1954**

**நேரம்: மாலை 7-54 P.M.**

**நட்சத்திரம்:**
**திருவோணம்**

மேலோங்கிக் கரையார் இனத்தைச்சேர்ந்த இப்பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. மணமகன் நற்பண்புகள் உடையவராகவும், உயர்ந்த உத்தியோகம் அல்லது போதிய வருமானமுள்ள வியாபாரஞ் செய்பவராகவும் இருக்கலாம். சீதனம் சாதகப் பொருத்தத்தின் பின்னர் நேரில் பேசிக்கொள்ளலாம்.

தொடர்பு: **இல. 61 திருக்கணித நிலையம்**

# "சோதிடம் கற்போம்"

ஞானி

(பங்குனி இதழ் தொடர்)

**ஜனனகால தசாகணித பதகம்**

| பாகை: | சூரியன் 6 வரு | | | சந்திர 10 வரு | | | குஜ, கே 7 வரு | | | ராகு 18 வரு | | | குரு 16 வரு | | | சனி 19 வரு | | | புதன் 17 வரு | | | சுக்கிரன் 20 வரு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் | ரோகிணி | அத்தம் | திருவோணம் | மி, சித், அவி, குஜன் | அச, ம, மூ, கேது | | திருவாதிரை | சுவாதி | சதயம் | புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி | பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி | ஆயிலியம் | கேட்டை | ரேவதி | பரணி | பூரம் | பூராடம் |
| | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா | வரு | மா | நா |
| 1 | 0 | 5 | 12 | 0 | 9 | 0 | 0 | 6 | 9 | 1 | 4 | 6 | 1 | 2 | 12 | 1 | 5 | 3 | 1 | 3 | 9 | 1 | 6 | 0 |
| 2 | 0 | 10 | 24 | 1 | 6 | 0 | 1 | 0 | 18 | 2 | 8 | 12 | 2 | 4 | 24 | 2 | 10 | 6 | 2 | 6 | 18 | 3 | 0 | 0 |
| 3 | 1 | 4 | 6 | 2 | 3 | 0 | 1 | 6 | 27 | 4 | 0 | 18 | 3 | 7 | 6 | 4 | 3 | 9 | 3 | 9 | 27 | 4 | 6 | 0 |
| 4 | 1 | 9 | 18 | 3 | 0 | 0 | 2 | 1 | 6 | 5 | 4 | 24 | 4 | 9 | 18 | 5 | 8 | 12 | 5 | 1 | 6 | 9 | 0 | 0 |
| 5 | 2 | 3 | 0 | 3 | 9 | 0 | 2 | 7 | 15 | 6 | 9 | 0 | 6 | 0 | 0 | 7 | 1 | 15 | 6 | 4 | 15 | 7 | 6 | 0 |
| 6 | 2 | 8 | 12 | 4 | 6 | 0 | 3 | 1 | 24 | 8 | 1 | 6 | 7 | 2 | 12 | 8 | 6 | 18 | 7 | 7 | 24 | 9 | 0 | 0 |
| 7 | 3 | 1 | 24 | 5 | 3 | 0 | 3 | 8 | 3 | 9 | 5 | 12 | 8 | 4 | 24 | 9 | 11 | 21 | 8 | 11 | 3 | 10 | 6 | 0 |
| 8 | 3 | 7 | 6 | 6 | 0 | 0 | 4 | 2 | 12 | 10 | 9 | 18 | 9 | 7 | 6 | 11 | 4 | 24 | 10 | 2 | 12 | 12 | 0 | 0 |
| 9 | 4 | 0 | 18 | 6 | 9 | 0 | 4 | 8 | 21 | 12 | 1 | 24 | 10 | 9 | 18 | 12 | 9 | 27 | 11 | 5 | 21 | 13 | 6 | 0 |
| 10 | 4 | 6 | 0 | 7 | 6 | 0 | 5 | 3 | 0 | 13 | 6 | 0 | 12 | 0 | 0 | 14 | 3 | 0 | 12 | 9 | 0 | 15 | 0 | 0 |
| 11 | 4 | 11 | 12 | 8 | 3 | 0 | 5 | 9 | 9 | 14 | 10 | 6 | 13 | 2 | 12 | 15 | 8 | 3 | 14 | 0 | 9 | 16 | 6 | 0 |
| 12 | 5 | 4 | 24 | 9 | 0 | 0 | 6 | 3 | 18 | 16 | 2 | 12 | 14 | 4 | 24 | 17 | 1 | 6 | 15 | 3 | 18 | 18 | 0 | 0 |
| 13 | 5 | 10 | 6 | 9 | 9 | 0 | 6 | 9 | 27 | 16 | 7 | 18 | 15 | 7 | 6 | 18 | 6 | 9 | 16 | 6 | 27 | 19 | 6 | 0 |

| கலை | சூரியன் | | | சந்திரன் | | | குஜ, கே | | | ராகு | | | குரு | | | சனி | | | புதன் | | | சுக்கிரன் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 0 | 0 | 3 | 0 | 0 | 5 | 0 | 0 | 3 | 0 | 0 | 8 | 0 | 0 | 7 | 0 | 0 | 9 | 0 | 0 | 8 | 0 | 0 | 9 |
| 2 | 0 | 0 | 5 | 0 | 0 | 9 | 0 | 0 | 6 | 0 | 0 | 16 | 0 | 0 | 14 | 0 | 0 | 17 | 0 | 0 | 15 | 0 | 0 | 18 |
| 3 | 0 | 0 | 8 | 0 | 0 | 14 | 0 | 0 | 9 | 0 | 0 | 24 | 0 | 0 | 22 | 0 | 0 | 26 | 0 | 0 | 23 | 0 | 0 | 27 |
| 4 | 0 | 0 | 11 | 0 | 0 | 18 | 0 | 0 | 13 | 0 | 1 | 2 | 0 | 0 | 29 | 0 | 1 | 4 | 0 | 1 | 1 | 0 | 1 | 6 |
| 5 | 0 | 0 | 14 | 0 | 0 | 23 | 0 | 0 | 16 | 0 | 1 | 11 | 0 | 1 | 6 | 0 | 1 | 13 | 0 | 1 | 8 | 0 | 1 | 15 |
| 6 | 0 | 0 | 16 | 0 | 0 | 27 | 0 | 0 | 19 | 0 | 1 | 19 | 0 | 1 | 13 | 0 | 1 | 21 | 0 | 1 | 16 | 0 | 1 | 24 |
| 7 | 0 | 0 | 19 | 0 | 1 | 2 | 0 | 0 | 22 | 0 | 1 | 27 | 0 | 1 | 20 | 0 | 1 | 30 | 0 | 1 | 24 | 0 | 2 | 3 |
| 8 | 0 | 0 | 22 | 0 | 1 | 6 | 0 | 0 | 25 | 0 | 2 | 5 | 0 | 1 | 28 | 0 | 2 | 8 | 0 | 2 | 1 | 0 | 2 | 12 |
| 9 | 0 | 0 | 24 | 0 | 1 | 11 | 0 | 0 | 28 | 0 | 2 | 13 | 0 | 2 | 5 | 0 | 2 | 17 | 0 | 2 | 9 | 0 | 2 | 21 |
| 10 | 0 | 0 | 27 | 0 | 1 | 15 | 0 | 1 | 2 | 0 | 2 | 21 | 0 | 2 | 12 | 0 | 2 | 26 | 0 | 2 | 17 | 0 | 3 | 0 |
| 20 | 0 | 1 | 24 | 0 | 3 | 0 | 0 | 2 | 3 | 0 | 5 | 12 | 0 | 4 | 24 | 0 | 5 | 21 | 0 | 5 | 5 | 0 | 6 | 0 |
| 30 | 0 | 2 | 21 | 0 | 4 | 15 | 0 | 3 | 5 | 0 | 8 | 3 | 0 | 7 | 6 | 0 | 8 | 17 | 0 | 7 | 20 | 0 | 9 | 0 |
| 40 | 0 | 3 | 18 | 0 | 6 | 0 | 0 | 4 | 6 | 0 | 10 | 24 | 0 | 9 | 18 | 0 | 11 | 12 | 0 | 10 | 6 | 1 | 0 | 0 |
| 50 | 0 | 4 | 15 | 0 | 7 | 15 | 0 | 5 | 8 | 1 | 1 | 15 | 1 | 0 | 0 | 1 | 2 | 8 | 1 | 0 | 23 | 1 | 3 | 0 |

**மகாதசை இருப்புக் காண**

ஒரு ஜாதகத்துக்கு மகாதசை இருப்புக்காண இரு வழிகள் கீழே தருகின்றோம்.

**வழி 1:** ஜன்ம நட்சத்திரத்தில் எஞ்சி நின்ற நாடி விநாடியை அந்நட்சத்திர தசா வருஷ சங்கியையாற் பெருக்கி அந்நக்ஷத்திர பரம நாழிகையாற் பிரிக்க வருவது செல்லாது நின்ற வருஷமாம். சேஷத்தை 12 ஆற் பெருக்கி மீண்டும் பிரிக்க வருவது மாதம். மிகுதியை 30 ஆற் பெருக்கி மீண்டும் பிரிக்க வருவது நாள்.

உதாரணம், ஜன்ம நட்சத்திரம் பூரம். எஞ்சிநின்ற நாடி 25 விநாடி 20 என வைத்துக்கொள்வோம். 25 நாடி 20 விநாடியை விநாடியாக்க $25 \times 60 + 20 = 1520$ விநாடி. பூர நட்சத்திரத்துக் குரிய தசை சுக்கிரன். இதற்குரிய தசா வருஷம் 20. $1520 \times 20 = 30400$

பரம நாழிகை 58 நா. 40 வி. என வைத்துக் கொண்டால் 30400 ÷ 58 40 (3520 விநா)

```
3520 ) 30400 ( 8
       28160
       -----
        2240
          12
       -----
       26880 ( 7
       24640
       -----
        2240
          30
       -----
       67200 ( 1
        3520
       -----
       32000
       31680
       -----
         320
```

(இது மிகக் குறைந்த தொகையாதலால் நீக்கிவிடவும். எனவே சுக்கிர மகாதசையில் இருப்பு 8 வ௫ 7 மீ 19 நாள்.

வழி 2: ஜனனகால சந்திரஸ்புடம் 4 ரா 21 பா 16 க. என வைத்துக்கொள்வோம். தை மாத "சோதிடமலர்" நவாம்ச பதகத்தில் பார்க்க 4 ரா 21 பா 16 க, (141 பாகை 16 கலை) பூரம் 3 துலாம் பூரநட்சத்திரத்தின் 4-ம் பாத முடிவு 146 பா. 40 க. 146-40 — 141-16=5 பா. 24 க. இது பூர நட்சத்திரத்தில் எஞ்சி நின்ற பாகை கலையாகும்.

தரப்பட்டுள்ள பதகத்தில் பூரம் நட்சத்திரத்தைப் பார்க்கவும்; அதற்கு மேலே சுக்கிரன் என இருக்கிறது.

5 பாகைக்கு நேரே பார்க்க 7 - 6 - 0 கீழே 24 கலைக்குப் பார்க்க வேண்டும் 20 கலைக்கு 0-6-0 } என
4 ,, 1-6 } வரும்

```
எல்லாவற்றையும் கூட்ட   7  6  0
                       0  6  0
                          1  6
                      ---------
                       8  1  6
```

சுக்கிர தசையில் இருப்பு 8 வ௫ 1 மீ 6 நாள் எனவரும். சந்திர ஸ்புடத்தைக் கொண்டு தசை காண்பதே சுத்தமானதாகும்.

(தொடரும்)

## மிதுன லக்ன ஆணும் இடப லக்ன பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலன்கள்

மிதுன லக்கின ஆணை இடப லக்கினப் பெண் சந்திக்கும்போது அவருடன் ஆழச் சிக்கிக்கொள்ளுமுன் கொஞ்சம் அமைதியாக இருப்பது புத்திசாலித் தனமாகும். ஏனெனில் மடைத்தனமான மோகம் காதல் ரூபமெடுக்கக்கூடும். மிதுனகாரர் மிகவும் சௌந்தரியமுடையவராயினும் ஒருகால் தொடர்பு கொண்டுவிட்டால் அவள் அதைத் தொடர்ந்து கைவிடாதிருக்கவேண்டும். கலைச் சிரத்தைகளை தனக்குள்ளேயே வைத்திருக்க வேண்டும். சரியான தொழில் நுட்பத்தரத்திற்கு இருந்தாலல்லால் அவர் மனத்தில் கலை ஒரு அடையாளத்தையும் உண்டாக்கமாட்டாது. மாட்டுப் பெண்ணுயிருப்பதை அவர் ஒருபோதும் விரும்ப மாட்டார். சுழலும் சமூகவாழ்வில் ஈடுபட்டவருக்கு அதேபோல் தன்னுடன் அதைப் பங்கு கொள்ளும் ஒருத்தியையே அவர் விரும்புவார். விருந்தோம்பலிலும் மக்களுடன் இலகுவாகக் கலந்து கொள்ளும் சுபாவமுடைய இடபலக்கினப் பெண்ணை அவர் மிகவும் விரும்புவார். இப்படிப் பட்ட சூழலில் வேறு ஒருவரை காதலிப்பதுபோல் நடிக்கும் இவரை அடக்க முயல்வாள். ஏனெனில் இடபப் பொறுமை ஒருபோதும் குன்ருது. ஆழ்ந்த தொடர்புகளில் ஈடுபடும் இவரை இவள் சரியாகப் புரிந்துகொள்ளமாட்டாள். அவர் சம்பாஷிக்க வேண்டும்; ஆராயவேண்டும். சனங்களுடன் கலக்க வேண்டும்; அவரை அப்படிச் செய்யவிடாமல் தனக்கு என்று வைத்திருக்க நினைப்பாளாகில் அவர்கள் நட்பு சிதறிவிடும். அவள் தனது தோற்றத்துக்கு அழகுசெய்யும் நேரத்தையும் ஒழுங்குபடுத்தலில் அவள் காட்டும் கெட்டித் தனத்தையும் அவரை வியப்பிலாழ்த்தும். உலகம் இருண்டதாக அவருக்கு தெரியும்போது சில சமயம் அவளுடைய குணநலத்தின் உதாரணத்தைக் கண்டு அவளிடமே தஞ்சமடைவார். நெகிழ்ந்திருந்த சாவையும் இன்மொரு முடிச்சுப் போட்டது போலாகும் இது.

வே. சின்னத்துரை — நல்லூர்

பச்சோந்திபோன்ற அவரது மனநிலை அவர்களுடைய பாலியல் வாழ்வை கெடுக்கப்பார்க்கும். இது அவளுக்கு பொறுக்கமுடியாது. ஒருகால் அவர் குறும்புக்காரப் பையன் போலவும் மறுகால் மிருகமாகவும் அல்லது அதற்கு குறைந்ததாகவும் நடந்து கொள்வார். இதற்கு அவளுடைய பிரதிபலிப்புகள் இவரை இன்னுமொரு ஆகாசக்கோட்டை கட்டும் பெண்ணுடைய படுக்கையில் புரளச்செய்யும். அவருக்கு படுக்கையிலே விதவிதமானவையே சீவியத்தின் உயிர்நாடி போலும். இதை அவர் அவளிடம் பெறமுடியாவிடின் அதை நாடியே வேட்டைக்குக் கிளம்புவார்.

இது ஒரு நல்ல கூட்டுறவு அல்ல.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 25

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-6-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப் படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனாம்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல. 25
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ 1 | 2 | கி 3 | 4 | 5 | தி 6 |
| 7 | ▩ | 9 | 10 | க் 11 | 12 |
| ர் 13 | 14 | 15 | ▩ | 17 | ரு 18 |
| 19 | 20 | ▩ | மா 22 | 23 | 24 |
| 25 | ன் 26 | 27 | 28 | ▩ | 30 |
| ▩ | 32 | ப 33 | 34 | 35 | ▩ |

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

**இடமிருந்து வலம்**

1 கிரகமொன்றின் சுற்றோட்ட வேகம் பூமியின் சுற்றோட்ட வேகத்திலும் குறைவாயிருக்கும் போது அக்கிரகம் இக்கதியில் செல்வதாக கொள்ளப்படும்.

9 அட்டதிக்குப் பாலகர்களில் இந்திரனுக்குரிய திக்கு குழம்பியிருக்கிறது.

13 உணவுப் பொருளொன்றின் அடைமொழியாகவரும் இவ்விடம் இந்தியாவிலுள்ள நகரொன்றைக் குறிக்கும். மாறியுள்ளது.

17 மாறியுள்ள இது [illegible]வகாலங்களை'க்குறிக்கும்.

19 அட்சரகணித குறியீடொன்றின் செய்கையை இச்சொல் உணர்த்துகிறது.

22 வலமிடமாகப் பார்த்தால் ''கையையுடைய விலங்கைக்'' காணலாம்.

25 ஒவ்வோர் மதமும் வெவ்வேறு கொள்கையைக் கொண்டிருப்பினும் ............ ஒருவரை வணங்குதலை எல்லா மதமும் வற்புறுத்துகின்றன. குழம்பியுள்ளது.

32 குழம்பியுள்ள இது 'பருவம்' எனப்பொருள் படும்.

**மேலிருந்து கீழ்**

1 அமாவாசை முதல் பூரணை வரை சந்திரன் வளர்ந்து வருவதை இவ்வாறு கூறுவர்.

3 சூரியன் முதல் சனி வரையான ஏழுகிரகங்களால் குறிப்பிடப்படும் இது காலக்கணக்குகளில் ஒன்று.

4 இராமன் இவ் வம்சத்துதித்தவன்.

5 எழுத்துக்களை ஒழுங்காக்க ''துன்பம்'' உண்டாகும்.

6 மாதமொன்றிற்கும் நட்சத்திரமொன்றிற்கும் பொதுவான பெயர் குழம்பியுள்ளது.

14 சிங்கராசி, கார்த்திகை, உத்தரம், உத்தராட நட்சத்திரங்களுக்கு இவர் அதிபதி. இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன.

22 சுபகருமங்களுக்கு இராக்காலம் விலக்கப்படும் தினம் குழம்பியுள்ளது.

27 தலைகீழான இதனிறுதியில் 'ம்' சேர்க்க ''கரணம்'' ஒன்று கிடைக்கும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 24-ன் விடைகள்**

இடமிருந்து வலம்

1. சகாப்தம் 7. கோமேதகம் 13. பூரம்
17. கட(ம்) 19. கிரணம் 27. கம்பர் 31. பரிவேடம்

மேலிருந்து கீழ்

1. கோசரம் 2. காகிதம் 3. கர்ப்பூரம் 4. தச(ம்)
5. மேடம் 18. பகல் 22. பணம் 29. க(வ)ரி

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு: செல்வி நல்லம்மா நாகமுத்து
8-ம் வட்டாரம், துறைநீலாவணை

2-ம் பரிசு: கோ. ரகுநாதன்
மே/பா எஸ். பஞ்சாட்சரசர்மா
சரவணமுத்து வீதி
மருதனுமடம் - சுன்னாகம்.

3-ம் பரிசு: எஸ். பி. சுப்பிரமணியம்
113/4, பிக்கரின்ஸ் வீதி
கொட்டாஞ்சேனை - கொழும்பு-13.